Registered as a news paper. பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 சித்திரை 09 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 ஸபர் 19 (22.04.2003) செவ்வாய்க்கிழமை இதழ் :201

உலகெங்குமுள்ள உங்கள் உறவினர்களுடன்
INTER NET
BROWSING CENTRE
ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
இலங்கை முழுவதும் 24 மணிநேரத்தில்
துரித தபால்/பொதிகள் சேவை.
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
303, K.K.S. Road, Jaffna. T.P. 021-2222670, 2223588
Fax - 2223214, Email-del - smskr@eureka.lk
(சி-754)

# அரசுடனான பேச்சுக்கள்; புலிகள் இடைநிறுத்தினர்!

## இதுவரையில் இணக்கம் கண்டவற்றை முதலில் அமுலாக்க ரணிலுக்குக் கடிதம்

(லண்டன்)

**தற்போதைய சமாதான முயற்சிகளில், முக்கியமான விடயங்களில் காணப்படும் அரசின் சில அதிருப்தியான போக்குகளினால், சமாதானப் பேச்சுக்களில் இருந்து ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு விலகுவதென விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடம் முடிவுசெய்துள்ளது. புலிகளின் தலைமைப் பீடத்தின் இம்முடிவு குறித்து, அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் நேற்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.**



அக்கடிதத்தின் விபரம் வருமாறு-

தற்பொழுது நடைபெறும் சமாதானப் பேச்சுக்கள் தொடர்பில், சில முக்கிய விடயங்களில் எமது அமைப்பு கொண்டுள்ள ஆழ்ந்த அதிருப்தியை, எமது தலைமையின் முடிவின் பிரகாரம் உங்களுக்கு உடனடியாக அறிவிக்குமாறு பணிக்கப்பட்டுள்ளேன்.

சமாதானப் பேச்சுக்களைக் குழப்பும் வகையில் சில நடவடிக்கைகள் நடைபெற்றும் கூட, முக்கிய தரப்புகளிடையான ஓராண்டு யுத்த நிறுத்தமும், ஆறு சுற்றுச் சமாதானப் பேச

(10 ஆம் பக்கம் பார்க்க)

## உலகத் தமிழர்க்கு பெருமையை தேடிக்கொடுத்தவர் பிரபாகரன்

### திட்டமிடல் அமைச்சின் ஆலோசகர் அலிஸாஹீர்



ஒரு உரிமைக்கான போராட்டத்தில், ஆயுதரீதியாக மட்டுமல்ல, சர்வதேச ரீதியான போராட்டங்களிலும் உலகத் தமிழர்களுக்கு பெருமை தேடிக்கொடுத்தவர், விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன்தான் என, திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சின் ஆலோசகர் அலிஸாஹீர் மௌலானா தெரிவித்தார்.

ஏறாவூர் 5 ஆம் குறிச்சியில் அன்னை பூபதியின் 15 ஆம் ஆண்டு நினைவை முன்னிட்டு நடத்தப்பட்ட விளையாட்டு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பாலா - பீரிஸ் சந்திப்பு ரத்தானதாக அறிவிப்பு

தற்போதைய சமாதான முயற்சிகள் தொடர்பாக நேற்று லண்டனில் அமைச்சர் ஜி.எல்.பீரிஸுடனான தனது சந்திப்பை புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் ரத்துச்செய்தார்.

தனது சந்திப்பு ரத்துசெய்யப்படுவதான தகவலை அன்ரன் பாலசிங்கம் நோர்வே அனுசரணையாளர்களுக்கும் அறிவித்துள்ளார். சந்திப்பு ரத்தானதற்கான காரணம் தெரிவிக்கப்படவில்லை.

### விண்ணாணம் விநாசியர்



இனியும் ஏமாத்தக்கூடாதெண்டதும், ஏமாந்தவர் தமிழரில்லையெண்டதும் இப்பவாச்சும் விளங்கட்டும்..!

## புலிகளின் முடிவு குறித்து அரச தரப்பில் அதிர்ச்சி

### கருத்துக்கூற அமைச்சர்கள் மறுப்பு

(கொழும்பு)

பேச்சுக்களில் பங்கேற்பதை இடைநிறுத்திக்கொள்வதாக விடுதலைப் புலிகள் அறிவித்திருப்பது - அரசாங்கத் தரப்பில் அதிர்ச்சியைத் தோற்றுவித்திருப்பதாகவும், இது தொடர்பாக அமைச்சர்கள் பலரும் கருத்துக்களை வெளியிடத் தயங்கியதாகவும், கொழும்பில் இருந்து நமது நிருபர் அறிவித்துள்ளார்.

இதேவேளை- பேச்சுவார்த்தைக் குழுவில் இடம்பெற்றுள்ள அமைச்சர்கள் பீரிஸ், மிலிந்த மொறகொட ஆகியோர் தற்போது நாட்டிலில்லாததால் - அவர்கள் கொழும்பு வந்த பின்னரே அரசாங்கத்தின் பதில் நடவடிக்கை பற்றித் தெரியவருமென எதிர்பார்க்கப்படுகின்றது.

எனினும் - விடுதலைப் புலிகளின் அறிவிப்புப் பற்றி, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க - இன்று தனது கட்சிப் பிரமுகர்களையும், முக்கிய அமைச்சர்களையும் சந்தித்துப் பேச விருப்பதாக, ஐ.தே.கவின் உயர்மட்டத் தலைவரொருவர் நமது நிருபரிடம் தெரிவித்தார். (200)

## வாகன அனுமதிப் பத்திரங்கள் சோதிப்பதில் பொலிஸ் தீவிரம்

குடாநாட்டின் பல பகுதிகளிலும் நேற்று பொலிஸார் வீதிச் சோதனைகளில் ஈடுபட்டதனைக் காணக் கூடியதாக இருந்தது.

அண்மையில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக - ஏப்ரல் 21 ஆம் திகதி முதல் வாகன வரி அனுமதிப்பத்திரம், வாகன காப்புறுதிப் பத்திரம் மற்றும் வாகன சாரதி அனுமதிப்பத்திரம் என்பவற்றைப் பரிசோதனைக்கு உட்படுத்தவே, இந்த வீதிச் சோதனைகள் மேற்கொள்ளப்படுவதாகத் தெரியவருகின்றது.

மோட்டார் சைக்கிள்கள் மற்றும் தனியார் வாகனங்களே இந்த வீதிச் சோதனையில் அதிகளவுக்கு உட்படுத்தப்படுகின்றன. (13)

## தமிழ் - முஸ்லிம் மக்களிடையே மூதூரில் நல்லுறவுக்கு இணக்கம்

### தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன

விடுதலைப் புலிகளுக்கும் மூதூர் முஸ்லிம் தலைவர்களுக்கும் இடையில் நேற்று நடைபெற்ற சந்திப்பில், மூதூரில் எதிர்காலத்தில் தமிழ் - முஸ்லிம் மக்களிடையே அமைதியைப் பேணுவது தொடர்பாக தீர்மானங்கள் சில எடுக்கப்பட்டன.

திருமலை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகத்தில், நேற்று மாலை முதல் நள்ளிரவு வரை இச்சந்திப்பு நடைபெற்றது. மாவட்டக் கண்காணிப்புக்குழுத் தலைவர் புர்ஹான் இதற்குத் தலைமை தாங்கினார்.

தமிழ் - முஸ்லிம் மக்களிடையே நம்பிக்கையைக் கட்டியெழுப்ப முயற்சிப்பது, இதற்காக இரு தரப்பும் நெருங்கிய தொடர்பைப் பேணுவது, சமாதானத்தை ஏற்படுத்த தமிழ் - முஸ்லிம் தரப்புகளை வேண்டிக் கொள்வது, அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் சட்டம் ஒழுங்கைப் பேண இதற்கான அதிகாரபீடத்திடம் பாரபட்சமின்றி இயங்குமாறு கேட்டுக்கொள்வது, புலிகளின் பகுதியில் முஸ்லிம்களின் பாதுகாப்பைப் புலிகளே உறுதிசெய்தல் போன்ற தீர்மானங்கள் அங்கு எடுக்கப்பட்டன.

(10 ஆம் பக்கம் பார்க்க)



திருமலைச் சந்திப்பில் பங்கேற்ற முஸ்லிம் பிரதிநிதிகளை முதற்படத்திலும் - கண்காணிப்புக்குழுப் பிரதிநிதி, இரா.சம்பந்தன் எம்.பி., மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் திலக் ஆகியோரை அடுத்துள்ள படத்திலும் காணலாம்.

SERENDIB AIRLINE
யாழ்ப்பாணத்தில் இருந்து வெள்ளவத்தை வரையும் அழையுங்கள்
021 - 2223916, 0777 - 517019
01-505632, 074-612656, 01-390128
(சி-730)

# தமிழ் மக்களின் விடுதலைக் கருத்துக்களின் திசையறிகருவியாக யாழ்ப்பாணம் பார்க்கப்படுகிறது

## யாழ். பல்கலைக்கழக கருத்தரங்கில் புலிகளின் முக்கிய பிரமுகர் வே.பாலகுமாரன்

இன்று யாழ்ப்பாணம், தமிழ் மக்களின் விடுதலைக் கருத்துக்களை தெளிவாக வெளிப்படுத்தக்கூடிய திசையறிகருவியாக, உலக நாடுகளால் பார்க்கப்படுகிறது. விடுதலையின் குறியீடாக யாழ்ப்பாணம் கருதப்பட வேண்டுமென, விடுதலைப் புலிகளின் முக்கிய அரசியல் பிரமுகர் வே. பாலகுமாரன் தெரிவித்தார்.

நேற்று யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில், சமகால அரசியல்நிலை தொடர்பாக மாணவர்கள் மத்தியில் அவர் கருத்துரை வழங்கினார்.

இந்நிகழ்வில்- விடுதலைப் புலிகளின் அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் தங்கன், அரசியற்துறையைச் சேர்ந்த கவியழகன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.



அங்கு பாலகுமாரன் தொடர்ந்தும் உரையாற்றும்போது தெரிவித்ததாவது:

சமூகத்தினுடைய சகல அங்கங்களும் சங்கமிக்கின்ற ஒரு அரசியல் மேடையாக, நாங்களே எங்கள் தலைவிதியை தீர்மானிக்கின்ற அரசியல் அரங்கமாக மேடைகளை, நாம் பயன்படுத்த விரும்புகின்றோம்.

பல்வேறு மேடைகள் மூலமாகவே நாம் இன்று மக்கள் மத்தியிலே வந்திருக்கின்றோம். 1995 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 29 ஆம் திகதி யாழ்ப்பாணத்தை விட்டுப் போன பின்னர், இன்றைக்கு 2003 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 ஆம் திகதி நான் உங்களைச் சந்திக்கிறேன்.

நெல்சன் மண்டேலா, 1961 ஆம் ஆண்டு அமைதி வழியில் போராடிக் களைத்த பின்னர், தேசத்தின் எழுச்சி என்கின்ற பெயரில் ஒரு இராணுவத்தை உருவாக்கினார். அதன் முதல் தளபதியாக அவர் பதவியேற்றபோது கூறியவார்த்தை, மக்களின் பொறுமைக்கும் ஒரு எல்லையுண்டு. எல்லோருடைய வாழ்க்கையிலும் ஒருநாள் வரும். அழிந்துபோதல் அல்லது போரிடுகின்ற நிலைவரும் என்று கூறினார். அதனடிப்படையில், 1995 இற்கு பிற்பட்ட காலப்பகுதியில், தமிழ் மக்களுக்கு இரண்டு நிலைகள்தான் இருந்தன. ஒன்று பணிந்து போதல். மற்றொன்று துணிந்து போராடுதல். போராடாவிட்டால் எமது வரலாறு முடிந்திருக்கும். இங்கு அனைத்துமே சிங்கள மயமாக்கப்பட்டிருக்கும். நாங்கள் துணிந்து போராடுவோம் என்கின்ற நிலையை எடுத்ததனால்தான், நாங்கள் சாவதற்காகப் பிறந்தவர்கள் என்கின்ற பட்டத்தைப் பெற்றுள்ளோம்.

இந்த யுத்தத்தில் பல்லாயிரம் போராளிகள் இறந்தார்கள். 1995 ஆம் ஆண்டுக்கும் 2000 ஆம் ஆண்டுக்கும் இடையில், பதினொராயிரத்து அறுபத்தெட்டுப் போராளிகளை நாம் இழந்துள்ளோம். அத்துடன், எல்லைப் படை என்கின்ற வகையில் பொதுமக்கள் பலரையும் நாம் இழந்துள்ளோம்.

எங்களைப் பொறுத்தவரையில் நாங்கள் வாழ்வதற்காகவே செத்தோம். வாழ்வின் பெருமையை சாவுக்கூடாக வெளிக்கொணர்ந்தோம்.

30 வருடப் போராட்டத்தின் விளைவை மக்கள் என்ன நினைக்கிறார்கள். சிலர் சொன்னார்கள், புலிகள் எமக்கு என்ன நன்மை செய்தார்கள். கூட்டணியின் பின்னால் புலிகள் வால் பிடித்துச் செல்கிறார்கள் என்று.

புலிகள் போரினால் பெறமுடியாததை பேச்சுவார்த்தை மூலம் பெற்றுள்ளார்கள் என்று இராணுவம் கூறுகிறது. எங்களைப் பொறுத்தவரையில் போரும், பேச்சுவார்த்தையும் ஒன்றுதான் என்று அவர்களுக்குப் புரியவில்லை.

முன்னாள் நண்பர்கள் நினைக்கிறார்கள். மத்தியில் கூட்டாட்சி - மாநிலத்தில் சுயாட்சி. விளைந்தது போதும், அறுவடையைச் செய்வோம் என்கிறார்கள். 48 ஆம் ஆண்டு முன்வைத்த சமஷ்டிக் கோரிக்கையை புலிகள் இப்போது ஏற்றுக்கொண்டுள்ளார்கள் என்று அவர்கள் கூறுகின்றனர்.

விடுதலைப் போராட்டம் என்பது மறதிக்கும் - நினைவிற்கும் இடையிலான போராட்டம். மறந்துபோனவற்றை திரும்பவும், மீண்டும் நினைவுபடுத்துவதுதான் விடுதலைப் போராட்டம். 48 ஆம் ஆண்டு இலங்கையின் மொத்த வருமானத்தில் தமிழருக்குக் கிடைக்கவேண்டிய வருமானம் கிடைக்கவில்லை. நாங்கள் கேட்கின்றோம், முடிந்தளவு வருமானங்களை, சொத்துக்களை, பங்குகளை எங்களுடைய மக்களுக்கு முடியுமான அளவு பெற்றுக்கொடுங்கள். நாம் அதைத் தடுக்கவில்லை. இவை எங்களுக்குக் கிடைக்க வேண்டிய உரிமை. இந்தச்சிறிய பங்குகளைத் தன்னும் தமிழ் மக்களுக்குப் பெற்றுக்கொடுத்தால் நாம் அதற்குத் தடையாக இருக்க மாட்டோம். மகேஸ்வரனுக்கும் டக்ளசுக்கும் நான் இதைச் சொல்லுகின்றேன்.

உலகில் விடுதலை அடைந்த நாடுகள், உதாரணமாக தென்னாபிரிக்க நாட்டில், 25 வருடங்களாக பாடசாலைகள் நடைபெறவில்லை. இந்த மண்ணில்தான் யுத்தம் நடந்தாலும் பாடசாலை மட்டுமல்ல, பல்கலைக் கழகமும் சிறப்பாக நடைபெற்றுள்ளது. பல்கலைக்கழகம் சரியான வழியில் மாணவர் சமுதாயத்தை உருவாக்க வேண்டும். இந்த சமூகத்தினுடைய தலைவிதியை தீர்மானிக்கின்ற இன்றைய முக்கியமான காலகட்டங்களில் நீங்கள் அழுத்தம் கொடுக்க வேண்டும். உங்கள் குரல் ஒலிக்க வேண்டும்.

விடுதலையினுடைய குறியீடாக யாழ்ப்பாணம் கருதப்படவேண்டும். அதற்கான சூழ்நிலையை நீங்கள் உருவாக்கிக்கொடுக்க வேண்டும். யாழ்ப்பாண மக்கள் வீரம், விவேகம், தந்திரம் அவற்றோடு சுயநலமுள்ள மக்கள் என்பது சகலருக்கும் தெரியும். போருக்காக மிகப் பெருமளவான புதல்வர்களைக் கொடுத்ததும், பெருமளவு இழப்புக்களைச் சந்தித்ததும் யாழ்ப்பாணம். இன்று யாழ்ப்பாணம் தலைநிமிர்ந்து நிற்பதற்கு இந்த மண்ணில் வீரம், துணிவு இருப்பதே என்பதை அனைவரும் அறிய வேண்டும்.

எங்களுடைய போராளிகள் ஆனையிறவிலும், அக்கினிச் சுவாலையிலும் உடல் துண்டு துண்டாகிச் சிதறும்போதும், சிரித்துக்கொண்டே வீரச்சாவடைந்தார்கள். ஆனையிறவு தமிழ் மக்களின் வெற்றியின் சின்னமாகவுள்ளது. இது அனைவருக்கும் சொந்தமான வெற்றி.

இன்று நாம் பல்லாயிரக்கணக்கான உயிர்கள், நெருக்குதல்கள், அழுத்தங்கள் எல்லாவற்றுக்குமிடையில் திட்டமிட்டு அடைந்திருக்கும் உயர்நிலை, இராணுவ ரீதியாக எம்மைத் தோற்கடிக்க முடியாத நிலைக்குக் கொண்டு சென்றுள்ளது. இன்று எந்தவொரு படையாலும், இராணுவ சக்தியாலும் தோற்கடிக்க முடியாது என்கின்ற நிலைமைக்கு எங்களை கொண்டுவந்து நிலைநிறுத்தியுள்ளோம்.

இன்று நாம் இந்த நிலையை அடைந்தபடியால், சர்வதேச சமூகத்தில் உள்ள 192 நாடுகள், ஐக்கிய அமெரிக்கா - அதனுடன் கூட்டுச் சேர்ந்த இங்கிலாந்து, ஜப்பான், சீனா, இந்தியா, ஐரோப்பிய ஒன்றியம் இவற்றைவிட, ஐ.நா சபை. இப்படியான பல்வேறுபட்ட நிறுவனங்களும் நாடுகளும் எங்கள் முன்னால் வந்து நின்று பேச்சு நடத்துகின்றன. சர்வதேச ரீதியாக பயங்கரவாதிகள் என்று பட்டம் கொடுத்தவர்கள் இன்று அதைப் புறக்கணித்துவிட்டு, பூமாலையோடு கிளிநொச்சி வந்து மாலைபோட்ட காட்சியைக் கண்டிருக்கின்றீர்கள். இது ஒரு சாதாரண நிகழ்ச்சியல்ல. ஒட்டுமொத்த தமிழ் மக்களின் போராட்டத்தில், பலர் தோற்கவும் சிலர் வெல்லவும் என்ன காரணம் என்று புரிந்துகொள்ள வேண்டும். நாங்கள் அதைப் புரிந்துகொண்டபடியால்தான தேவையற்ற அரசியல் விபத்துக்களில் சிக்க விரும்பவில்லை. உலக சமூகத்துக்குள்ளே சுழியோடி நெறிப்பட்டு நாங்கள் தெளிவாகப் பணி புரிந்துவருகின்றோம். நாங்கள் கடந்த இரண்டு வருடகாலமாக தலைவர் எடுத்த அரசியல் நுண்ணுணர்வுத் திறனுடைய வெளிப்பாடாக அரசியல் நுணுக்கங்களுடன் செயற்பட்டதன் ஊடாக, தென்னாசிய அரசியலில் தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளோம். இந்தியாவை நாம் பகைக்க விரும்பவில்லை. இந்தியாவை எமக்குச் சாதகமாக்க நாங்கள் முயற்சிகளை எடுத்து வருகின்றோம்.

இன்று புலியை எதிர்ப்பவன் அமைதியை எதிர்ப்பவன் என்றாகிவிட்டது. புலிகளோடு உறவை வைத்துக்கொண்டால் தென்னாசிய சமநிலையைப் பேணலாம் என ஐ.நா. சபை உட்பட ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான், சீனா ஆகிய நாடுகள் அனைத்துமே புரிந்துள்ளன.

வட. - கிழக்கு ரீதியாக ஒரு சமுதாயம் போராடி அழியாமல் இனத்தைக் காத்து, அரசியல் ரீதியாக தெளிவான நிலைப்பாட்டை அடைந்து, செயற்பட்டு வருகின்றோம்.

எமது பகுதியில் விதிக்கப்படும் வரிப்பிரச்சினையையும் முடிந்தளவு தீர்க்கும்படி எமக்குப் பணிக்கப்பட்டுள்ளது. வரியினை நாம் நீக்க முடியாது. ஆனால் நீக்கும்காலம் வரும். எங்களுக்கு தமிழ் நிர்வாகத்தை அரசு அளிக்க முன்வருமாக இருந்தால், இந்த வரி நீக்கப்படும். இப்பொழுது சில பிரச்சினைகளை தீர்ப்பதற்கு நாம் முயறசி எடுத்துருகின்றோம். இடைக்கால நிர்வாகம், சிறான் என்கின்ற அமைப்பு ஊடாக கேட்டுவருகின்றோம்.

இந்த விடுதலைப் போராட்டம் வெல்வதற்கான கடைசிக் கட்டத்தில் இருக்கின்றது. நாம் எந்த இழப்புமில்லாமல், போரில்லாமல் வெல்ல முடியுமா என யோசிக்கின்றோம். ஒரு போராளியையும் எம்மால் தற்போது இழக்க முடியாதநிலை. எத்தனையாயிரம் போராளிகளை நாம் இழந்திருக்கிறோம். ஒவ்வொரு தளபதிகளையும் கேட்டால் தெரியும். அவர்கள் போராளிகளை அனுப்பிவிட்டு எவ்வளவு வேதனைப்பட்டிருக்கிறார்கள்.

நாம் போராட்டப் பாதையிலிருந்து விலகி எம்மை ஊரறியப் பலவீனப்படுத்தி, நிலைதடுமாற வைத்து ஆளுகின்ற ஆசையை உருவாக்கி, ஜனநாயக நீரோட்டத்தில் இருந்து எங்களை விலக வைக்கலாம் என்று நினைத்தால் அது நடக்கின்ற காரியமல்ல.

இன்றைக்கும் தமிழீழ மக்களுடைய பாதுகாப்புப் போர்வையாக நாம் இருக்கின்றோம். உங்களை நாங்கள் புரிந்துகொண்டிருக்கின்ற மாதிரி நீங்கள் எங்களையும் புரிந்துகொள்ள வேண்டும்.

எமது விடுதலைப் போராட்டத்தைப் பலவீனப்படுத்தாதீர்கள். அதனைக் காப்பாற்றி குறைகளை சுட்டிக்காட்டி இறுதி இலக்கை அடைய உதவுங்கள். இயக்கம் தவறுகளை விட்டிருக்கிறது. அதை இப்போது திருத்திக்கொண்டிருக்கிறோம். எங்களிற்கு ஈராக் நல்லதொரு பாடம். நாங்கள் சாதாரண மக்களாக வாழ விரும்புகிறோம். எங்களையும் வாழ விடுங்கள். நீங்களும் வாழுங்கள் என சிங்கள மக்களுக்குக் கோரிக்கையை வைத்திருக்கிறோம் என்றார். (சு,ரா)



கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினர்.


## பணிநிலை வேண்டுகை

தமிழர் புனர்வாழ்வுக்கழகம், நடுவப்பணியகத்தில் கீழ் குறிப்பிடப்பட்ட பணி நிலைகளில் பணியாற்றக்கூடிய தகுதி வாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

- ✻ திட்ட முகாமையாளர் (PROJECT MANAGER)
- ✻ தொழில் நுட்பவியலாளர் (கட்டடம்)
- ✻ குடி சார் எந்திரவியலாளர் (Civil Engineer)
- ✻ கணனி தரவு நிரற்படுத்துனர்

தகுதியானவர்கள் எதிர்வரும் 30.04.2003 ஆம் திகதிக்கு முன்னர் தங்களது விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு வேண்டப்படுகிறீர்கள்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி-
தமிழர் புனர்வாழ்வுக்கழகம்
நடுவப்பணியகம்,
கண்டி வீதி,
கிளிநொச்சி.

★ வேதனம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.

(320)



ராஜா யாழ்ப்பாணம்.
இலங்கையிலும் இந்தியாவிலும்
ஒரே தின வெளியீடு
சரத்குமார் (இருவேடம்), சிம்ரன்,
ரோஜா, வடிவேல் நடித்த
அரசு
10.30, 2.30, 6.30,9.30
(சி-732)

நிறஞ்சனாஸ் சங்கானை
விஜய், ஸ்நேகா நடித்த
வசீகரா
காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
URASSIC PARK 3
(சி-731)


## இன்றைய நாள் இனிய நாள்

### 22-04-2003 - செவ்வாய்க்கிழமை

மேடம் :- காரிய வெற்றி, பொருள் வரவு, பணவரவு, சிநேக லாபம், பிரயாணத்தால் நன்மை.

இடபம் :- வாக்கு வசீகரம், புத்திரசுகம், பிரயாசை மிகுதி, பொதுசன மதிப்பு.

மிதுனம் :- காரிய விக்கினம், காலில் ரோகம், மன மகிழ்ச்சி, இல்லறச் சிறப்பு

கர்க்கடகம் :- இன சன விரோதம், கோப மிகுதி, தேக மெலிவு, குடும்பானுகூலம்

சிங்கம் :- நேத்திர ரோகம், சிநேகிதலாபம், காரிய வெற்றி, களஸ்திர புத்திர மகிழ்ச்சி.

கன்னி :- தர்மகாரிய வெற்றி, தனித்த நிலை, பொருள் வரவு, பெரியோர் மதிப்பு.

**பிரபல சோதிடர்**
**எஸ்.குகநேசன்**

துலாம் :- பலவித ரோகம், இன சன கொண்டாட்டம், வாக்குக் கலகம், சிநேகலாபம்.

விருச்சிகம் :- சோம்பல், காரியசித்தி, நிலைப்பிரிவு, சௌபாக்கியம், சிநேகலாபம்.

தனு :- காரிய வெற்றி, உயர்ந்த நிலை, சிநேகலாபம், இன சன விரோதம்.

மகரம் :- விஷப்பயம், தேக சுகக் குறைவு, பணக்குறைவு, அதிக பிரயாசை, நற்குண விருத்தி.

கும்பம் :- வீண்பயம், சமாதான வாழ்வு, தனதானிய நிறைவு, சிநேகநன்மை

மீனம் :- கொடுக்கல் வாங்கல பிணக்கு, வயிற்றில் ரோகம், பந்து விரோதம், நற்கீர்த்தி.

# அரசியல் அமைப்பாக மாற விடுதலைப் புலிகள் முயற்சி

## அமைச்சர் பீரிஸ் கூறுகிறார்

விடுதலைப் புலிகள் இராணுவக் கட்டமைப்பிலிருந்து அரசியல் அமைப்பாக மாறுவதற்கு முயற்சி செய்து வருவதாக - நீதி அரசியலமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்காவில் ஜொகனஸ்பேர்க் பல்கலைக்கழகத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அடிப்படைவாதக் கருத்துக்களை ஊக்குவித்து வந்தமை இலங்கையின் இனப்பிரச்சினை நீண்டகாலம் தீர்க்க முடியாமற் போனதற்கான முக்கியமான காரணமாக அமைந்தது.

எனினும், தற்போது அந்தநிலையில் மாற்றம் ஏற்பட்டு வருவதாகவும் அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டினார்.

# கண்காணிப்புக்குழுவின் சிபார்சு தனிநாட்டுக்கே வழிவகுக்கும்!

## ஜே.வி.பி. குற்றச்சாட்டு

தமிழீழ விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் அணியைத் தனியான கடற்படைப் பிரிவாக அங்கீகரிக்க வேண்டுமென்று போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு சிபார்சு செய்துள்ளமை, தனிநாடு ஒன்றை அமைக்க வழிவகுப்பதாக ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஜே.வி.பியின் சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது -

நாட்டின் பாதுகாப்புக் குறித்து சட்டபூர்வமான பொறுப்புள்ள ஜனாதிபதி இதற்கு மேலும் பொறுமையைக் க்டைப்பிடிக்க வேண்டியதில்லை. கண்காணிப்புக்குழு சமர்ப்பித்துள்ள உத்தேச ஆலோசனைகள் நாட்டின் இறைமைக்கும், ஒருமைப்பாட்டுக்கும் பெரும் அச்சுறுத்தலாக உருவெடுத்துள்ளது.

இதனால், போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் சிபார்சுகளை ஏற்றுக்கொள்வதா, இல்லையா என்பது குறித்து அரசாங்கம் நாட்டு மக்களுக்கு தெளிவான விளக்கமளிக்க வேண்டும் என்றும் ஜே.வி.பி மேலும் கேட்டுள்ளது.

# சமாதான நடவடிக்கைகளுக்கு சொந்த முறையில் ஆதரவளிப்பேன்

## பங்களாதேஷில் ஜனாதிபதி சந்திரிகா

சமாதான நடவடிக்கைகளின் வெற்றிக்குச் சொந்த முறையில் தொடர்ந்தும் அர்ப்பணித்துப் பணிபுரிய இருப்பதாக ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகாவைக் கௌரவிக்கும் வகையில் நேற்று முன்தினம் பங்களாதேஷ் ஜனாதிபதி வழங்கிய இராப்போசன விருந்தின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்சமயம் மேற்கொள்ளப்படும் சமாதான் நடவடிக்கைகளில் அரசாங்கத்துக்கு வழிகாட்டியாக இருக்கப் போவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் பங்களாதேஷ் அளித்து வரும் உதவிகளுக்கு ஜனாதிபதி நன்றி தெரிவித்தார். சிட்டகொங்கில் ஏற்பட்ட கிளர்ச்சிவாதப் பிரச்சினைக்குச் சமாதான தீர்வுகண்ட பங்களாதேஷின் அனுபங்களை இலங்கையும் நன்கு அறிந்து உபயோகிக்க முடியும் என்றும் அவர் சொன்னார்.



ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று அதிகாலை 12.30 மணியளவில் பங்களாதேஷுக்கான தனது இரண்டு நாள் விஜயத்தை முடித்துக்கொண்டு நாடுதிரும்பினார்.

# கொழும்பு மாவட்ட எம்.பியை கைது செய்ய உத்தரவு!

ஐக்கிய தேசியக்கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நிலந்த பெரேராவைக் கைது செய்யும்படி பொலிஸ்மா அதிபர் ஏ.ஈ.ஆனந்தராஜா உத்தரவிட்டுள்ளார்.

நுவரேலியா மாவட்டத்தில் நேற்று முன்தினம் கார்ப்பந்தயத்தின் போது வீதிப்போக்குவரத்தினைக் கட்டுப்படுத்திக் கொண்டிருந்த போக்குவரத்துக் கண்காணிப்புப் பொலிஸார் மீது மத்திய கொழும்புத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் நிலந்த பெரேரா தாக்குதல் நடத்தினார்.

அதனைத் தொடர்ந்து போக்குவரத்து பொலிஸ் அதிகாரி ஸ்தலத்திற்கு வந்து விசாரணைகளை மேற்கொண்டபோது, மேற்படி நாடாளுமன்ற உறுப்பினர் பொலிஸ் அதிகாரியை தாக்கியுள்ளார்.

இதனைத் தொடர்ந்தே பொலிஸ் மா அதிபர் - ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான நிலந்த பெரேராவைக் கைது செய்யும்படி உத்தரவிட்டுள்ளார். (01)

## மாவட்ட சாரண ஆணையாளராக ஜெகநாதன்

பருத்தித்துறை மாவட்ட சாரணர் கிளை சங்கத்தின் மாவட்ட ஆணையாளராக, புலோலி வேலாயுதம் மகாவித்தியாலய அதிபர் ஆ.ஜெகநாதன்- இலங்கை சாரண தலைமைக் காரியாலயத்தினால் நியமிக்கப்பட்டுள்ளார். (17)

# சர்ச்சையில் சிக்கியுள்ள 'பொன்மணி' தமிழ்ப்படம்

(கொழும்பு)

இலங்கையில் தயாரிக்கப்பட்ட "பொன்மணி" தமிழ்த்திரைப்படத்தைச் சிங்கப்பூரில் நடைபெறவுள்ள திரைப்பட விழாவுக்கு அனுப்புவது தொடர்பாகச் சர்ச்சைகள் எழுந்துள்ளன.

இத்திரைப்படத்தை முத்தையா இராஜசிங்கம் தயாரித்திருந்தார். தர்மசேன பத்திராஜ இத்திரைப்படத்தை இயக்கியிருந்தார். தயாரிப்பாளரான இராஜசிங்கத்துக்குத் தெரியாமல், இயக்குநர் சிங்கப்பூர் திரைப்பட விழாவுக்கு பொன்மணி திரைப்படத்தை அனுப்பத் திட்டமிட்டிருந்தார்.

இது தயாரிப்பாளருக்கும், இயக்குநருக்கும் இடையிலான ஒப்பந்தத்தை மீறும் செயற்பாடு என்றும் தயாரிப்பாளர் தரப்புக் குற்றஞ்சாட்டியுள்ளது. அத்துடன், திரைப்படத்தின் பதிப்புரிமையினையும் இயக்குநர் மீறுவதாகத் தயாரிப்பாளர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

# விடுமுறையில் சென்ற படையினரை இரவிரவாக ஏற்றிய விமானங்கள்

(கொழும்பு)

விடுமுறையில் செல்லும் படையினருக்கான போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதில் தாம் நெருக்கடிகளை எதிர்கொள்வதாகப் படையதிகாரிகள் - பாதுகாப்பு அமைச்சுக்குப் புகார் செய்துள்ளனர்.

புதுவருடத்தையொட்டி சுமார் பத்தாயிரம் படையினருக்கு யாழ்ப்பாணத்திலிருந்து வீடுகளுக்குச் செல்ல விடுமுறை வழங்கப்பட்டது. ஆனால், இவர்களை வீடுகளுக்கு அனுப்பிவைக்கப் போதிய போக்குவரத்து வசதிகள் இருக்கவில்லை.

இரண்டு அன்ரனோவ் விமானங்கள் மட்டுமே படையினரை ஏற்றியிறக்கின. இந்த விமானங்களின் மூலம் படையினரை முழுமையாக வீடுகளுக்கு அனுப்பமுடியாததால், தனியார் விமானங்களும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டன.

இருந்தபோதிலும், விடுமுறையில் செல்லும் படையினரை முழுமையாகப் பலாலியிலிருந்து இரத்மலானைக்குக் கொண்டு செல்வதற்காகப் புத்தாண்டு தினத்தன்று இரவுவரை இந்த விமானங்கள் தொடர்ச்சியாகப் பறந்து கொண்டிருந்தன என்றும் இந்த அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# சம்பள உயர்வு இன்றேல் தொழிற்சங்க நடவடிக்கை

## அரசாங்க ஊழியர் தொழிற்சங்கம் கோரிக்கை

(கொழும்பு)

சம்பள அதிகரிப்புச் சம்பந்தமான தங்களது கோரிக்கையை அரசாங்கம் நிறைவேற்றத்தவறினால், தொழிற்சங்க நடவடிக்கை எடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் என்று- அரசாங்க ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பைக் கோரும் தொழிற்சங்கம் ஒன்று எச்சரித்துள்ளது.

அதன் அமைப்பாளர்களான லியனகே வின்சார், டபிள்யூ.ஏ.டி.விமலரத்ன ஆகியோர் இந்த விடயம் தொடர்பாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

தங்களது ஏனைய கோரிக்கைகளும் பூர்த்திசெய்யப்பட வேண்டும் என்றும் அவர்கள் கேட்டுள்ளனர்.

வாழ்க்கைச் செலவு அதிகரித்தபோதிலும், கடந்த 18 மாதங்களாகச் சம்பள அதிகரிப்பு எதுவும் வழங்கப்படவில்லை. அதிகரித்த ஒவ்வொரு வாழ்க்கைச் செலவுப் புள்ளிக்கும் 5 ரூபா என்ற அடிப்படையில் சம்பள அதிகரிப்பு வழங்கப்பட வேண்டும் என்று கோரிக்கைவிட்டிருப்பதோடு,

4 ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு எதிர்பார்க்கப்படுவதாகவும், அரச சொத்துக்கள் - தனியார் மயப்படுத்தப்படுவதை நிறுத்த வேண்டும் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முன்பள்ளி கலந்துரையாடல்

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஏற்பாட்டில் முன்பள்ளி அபிவிருத்தி சம்பந்தமான கருத்தரங்கு ஒன்று நாளை மறுநாள் காலை 9 மணிக்கு அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இதில் ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்களைக் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (17)

# யால சரணாலயத்தைக் கண்டுகளிக்க படையெடுக்கும் சுற்றுலாப் பயணிகள்

(கொழும்பு)

ஏப்ரல் விடுமுறை ஆரம்பித்ததையடுத்து அண்மையில் திறக்கப்பட்ட யால வனவிலங்கு சரணாலயத்துக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதாக வனவள திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

தற்போது தினமும் யால சரணாலயத்துக்கு 350 இற்கு மேற்பட்ட வாகனங்கள் வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர். ஆனால், அதிகரித்துள்ள உல்லாசப் பயணிகளுக்கு ஏற்றவசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க முடியாதிருப்பதாக அந்த அதிகாரிகள் மேலும் குறிப்பிட்டனர்.

நான்கு அல்லது ஐந்து வாகனங்களுக்கு ஒரு வழிகாட்டியையே அனுப்ப முடிவதாகவும், ஏனைய வாகனங்கள் தாமாகவே சரணாலயத்துக்குள் சுற்றிப் பார்வையிடுவதாகவும், இவ்வாறு செல்லும் அநேகமான வாகனங்களிலுள்ள சுற்றுலா பயணிகள் ஒரு மிருகத்தைக்கூடக் காணாமல் திரும்புவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வழக்கத்தில் 80 வழிகாட்டிகள் இந்த சரணாலயத்தில் வேலை செய்தபோதும் இப்போது 15 பேர் மட்டுமே பணியாற்றுகின்றனர்.

முன்னர் சிறிய வாகனங்கள் மட்டுமே சரணாலயத்துக்குள் நுழைவதற்கு அனுமதிக்கப்பட்டது. இப்போ பெரிய வாகனங்களும் அனுமதிக்கப்படுகின்றன. பெரிய வாகனங்கள் அனுமதிக்கப்படுவதால், சரணாலயத்தின் சுற்றுச்சூழல் பதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இப்போது யால சரணாலயத்திற்கு நாளொன்றுக்கு 3 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா வருமானம் கிடைப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (01)

## வடக்கு புனர்வாழ்வு அதிகார சபையினால்

# பிரதேச சபைகளுக்கு வழங்கிய பிக்கப் மீளளிக்கப்படாதது குறித்து ஆராய கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டிலுள்ள ஆறு பிரதேச சபைகளுக்கு வடமாகாண புனர்வாழ்வு அதிகார சபையினரால் கையளிக்கப்பட்ட பிக்கப் வாகனங்கள் இன்னமும் மீளளிக்கப்படாமை குறித்து ஆராய்வதற்கு, இன்று புனர்வாழ்வு அமைச்சர் ஜெயலத் ஜெயவர்த்தன தலைமையில் கூட்டம் ஒன்று இடம்பெறவுள்ளது.

இன்று காலை 9.30 மணிக்கு யாழ். அரச செயலகத்தில் இடம்பெறவுள்ள இக்கூட்டத்திற்கு வருகை தருமாறு - நெடுந்தீவு, கோப்பாய், தெல்லிப்பழை, வேலணை, சாவகச்சேரி, பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேச சபைகளின் செயலாளர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இப்பிரதேச சபைகள் முன்னர் ஈ.பி.டி.பியின் கட்டுப்பாட்டிற்குள் இருந்த சமயம், இவற்றின் தலைவர்களுக்கு வடமாகாண புனர்வாழ்வு அதிகாரசபையினரால் பிக்கப் வாகனங்கள் வழங்கப்பட்டிருந்தன.

ஆனால், இந்தப் பிரதேசசபைகளின் ஆயுட்காலம் முடிந்த பின்னர் அந்த வாகனங்களைப் பிரதேசசபையின் செயலாளர்களிடம் கையளிக்கும்படி புனர்வாழ்வு அமைச்சினால் கோரப்பட்டிருந்தது.

எனினும் - இதுவரை மேற்படி பிக்கப் வாகனங்கள் எதுவும் பிரதேச சபைகளிடம் மீளளிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (லி)

# 'சுபானு' புத்தாண்டு உங்களுக்கு எப்படி

## விருச்சிகம்



விசாகம் 4 ம் பாதம் முதல் அனுஷம், கேட்டை வரை

**உங்கள் விசேடத் தனித் திறன்கள்**

கண்டிப்பு, மனஉறுதி, கடினமான பொறுப்பையும் முடிக்கும் ஆற்றல், துணிவு, அசாதாரண தைரியம், நேர்மை.

**உங்கள் பலவீனம்**

அசட்டுத்தைரியம், பிடிவாதம், முன்கோபம், அவசரமுடிவுகள், பிறர் பிரச்சினைகளைத் தானாகவே ஏற்றுக்கொண்டு பின்பு அதனால் கஷ்டப்படுவது.

### 14.04.2003 முதல் 16.08.2003 வரை

சனி பகவான் உங்கள் ராசிக்கு 8 ஆம் இடத்திற்கு மாறுகிறார். குருபகவான் பாக்ய ஸ்தானத்தில் நீடிக்கிறார். சப்தம ஸ்தானத்தில் ராகு. பணவசதிக் குறைவிராது. அதனைக் குரு பார்த்துக் கொள்வார். ராகுவின் நிலையும், சனியின் சஞ்சாரமும் நன்மை செய்பவை அல்ல. உங்கள் ஆரோக்கியம் மட்டுமன்றி, உங்கள் மனைவியின் ஆரோக்கியமும் அடிக்கடி . பாதிக்கப்படக்கூடும். குடும்பத்தில் வீண் பிரச்சினைகள் ஏற்படும். கணவன், மனைவியரிடையே ஒற்றுமை குறையும். குடும்பப் பிரச்சினைகள் நீடிக்கும்.

விருச்சிக ராசிக்கு அதிபதி எளிதில் தீவிர உணர்ச்சிகளை அதிகமாக்கும் வீரியம் வாய்ந்த செவ்வாய் ஆவார். இந்த ராசிக்கு சனி பகவான் 3,4 க்கு அதிபதி ஆகிறார். இந்தச் சனி பகவான் உங்கள் ராசிக்கு 8 ஆம் இடத்தில் சஞ்சரிப்பதால், குடும்பத்தில் பலவித பிரச்சினைகள் நீடிக்கும்.

சகோதர, சகோதரிகள் ஆகியோரிடையே பரஸ்பர கருத்து வேறுபாடுகளும், ஒற்றுமைக் குறைவும் ஏற்படும். சொத்துக்கள், பாகப்பிரிவினை சம்பந்தமாக நீதிமன்றம் செல்ல வேண்டியதற்கு அவசியம் கூட ஏற்படலாம்.

ஜெனன கால ஜாதகத்தின் கிரக நிலைகளையும், தற்காலம் நடைபெறும் தசா, புத்திகளையும் கொண்டு இத்தகைய சூழ்நிலை உருவாகுமா என்பதைக் கண்டுபிடித்து விடலாம். விருச்சிக ராசியினர் அனைவருக்குமே இத்தகைய பிரச்சினைகள் ஏற்படும் என்று அர்த்தமில்லை. தற்போதுள்ள கிரக நிலைகளில் இத்தகைய சூழ்நிலை உருவாகக்கூடும் என்பதே ஜோதிடத்தின் கருத்தாகும்.

அஷ்டம ஸ்தானத்தில் ,சனி சஞ்சரிக்கும் காலம்வரை இரவில் வாகனங்களை வேகமாக ஓட்டிச் செல்வதையும், தனியே வெளிச் செல்வதையும், கூடியவரையில் விமானப் பயணங்களையும், இரு சக்கர வாகனங்களை வேகமாக ஓட்டுவதையும் தவிர்ப்பது நல்லது. அதாவது, எப்போதுமே சனி பகவான் அஷ்டமத்தில் வரும்போது விபத்துக்கள் நேரிடும் என்று அர்த்தமில்லை.

ஆனால், ஒரு குறிப்பிட்ட கோள்சார கிரக நிலைகள், தசா, புத்திகள் ஆகியவை பாதகமாக அமையும் போது, அஷ்டமச் சனியும் நடைபெற்றால் அப்போது விபத்துக்கள் ஏற்படக்கூடும் என்பதே புராதன ஜோதிட மகா புருஷர்கள் கூறியுள்ள கருத்தாகும்.

**உத்தியோகம், தொழில், வியாபாரம்**

வேலையில் கடின உழைப்பு இருக்கும். வெளியூர்ப் பயணங்களினால் ஆரோக்கியம் குன்றும். வேலை பார்க்கும் இடத்தில் பலவித பிரச்சினைகள் உண்டாகும். பொறுப்புகள் அதிகரிக்கும். உழைப்பிற்கேற்ற ஊதியமிராது. மேலதிகாரிகளுடன் கருத்து வேற்றுமை ஏற்படும். சிலருக்கு இடமாற்றம் உண்டு. உங்களுக்கு நியாயமாக அளிக்கப்படவேண்டிய பதவி உயர்வு வேறொருவருக்குத் தரப்படும். தொழிற்துறை அன்பர்களுக்கு உற்பத்தி பாதிக்கப்படும். அரசாங்க அதிகாரிகள் தொல்லை தருவார்கள். தொழிற்துறையில் உள்ளவர்கள் உற்பத்தியை அதேயளவில் தொடர்ந்து வைத்துக்கொள்ளச் சிரமப்படுவார்கள். வியாபாரிகளுக்கும் சோதனையான நேரமிது. கடும் போட்டிகளை நீங்கள் சமாளிக்க வேண்டியிருக்கும். சரக்குகள் விலை போகாமல் தங்கிவிடும்.

**அரசியலில் ஈடுபடுவோர்**

கிரகநிலைகள் தொடர்ந்து அனுகூலமில்லாத நிலைகளில் சஞ்சரிக்கின்றன. கட்சியில் செல்வாக்குக் குறையும். மேலிடத்துடன் அபிப்பிராயபேதம் ஏற்படக்கூடும். உங்களைப் பற்றி மேலிடத்திற்குத் தவறான புகார்கள் கொடுக்கப்படும்.

அதனால், உங்கள் மன அமைதி பாதிக்கப்படும். அஜாக்கிரதையான பேச்சினால் வேண்டாத பிரச்சினைகளில் சிக்கிக்கொள்ள நேரிடும். கட்டுப்பாட்டுடனும், எச்சரிக்கையுடனும் இருப்பது அவசியம்.

**மாணவ மணிகள்**

அஷ்டம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் சனிபகவானால் அடிக்கடி ஏதாவது ஒரு சிறு உடல் உபாதைகள் ஏற்பட்டு, அதனால் அசதியும், சோர்வும், சோம்பலும் கல்வி முன்னேற்றத்தைத் தடுக்கும். சோர்ந்தாற்போல் சில மணிநேரமும் உட்கார்ந்து படிக்கமுடியாது. பாடுபட்டால்தான் ஆண்டுத் தேர்வில் நல்ல மதிப்பெண்கள் பெறமுடியும்.

**விவசாயத்துறையினர்**

வயல் பணிகளில் உழைப்பு சக்தியை மீறி இருக்கும். வருமானமும், விளைச்சலும் திருப்திகரமாக இருக்கும். உடல் நலனில் கவனமாக இருங்கள். இரவில் வயலுக்குச் செல்லும்பேர்து விஷ ஜந்துக்களால் பாதிப்பு ஏற்படக்கூடும். ஜாக்கிரதையாக இருங்கள்.

**பெண்மணிகள்**

பணவசதி திருப்திகரமாக இருப்பதால், குடும்ப நிர்வாகத்தில் எவ்வித சிரமமும் இருக்காது. இருப்பினும், ஓய்வில்லாத உழைப்பினாலும், சிறு சிறு உடல் உபாதைகளினாலும் அடிக்கடி உடல் நலன் குன்றும். அவ்வப்போது சிறிது ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள். கணவருடன் சற்று அனுசரித்து நடந்து கொள்வது உங்கள் மன அமைதிக்கு அவசியமாகும். இதனை ஏன் கூறுகிறோம் என்றால், ஜோதிடக் கலையின் விதிகளின்படி விருச்சிகராசிப் பெண்மணிகள் எளிதில் உணர்ச்சி வசப்படக்கூடியவர்களாக இருப்பார்கள். ஆதலால், இந்த அறிவுரையைக் கூறியிருக்கிறோம்.

**ஆரோக்கியம்**

ஏற்கனவே நாங்கள் கூறியுள்ளபடி 8 ஆம் இடத்தில் சனி பகவான் சஞ்சரிப்பதால், ஆரோக்கியக் குறைவு ஏற்படும். முக்கியமாக இருதய சம்பந்தமான நோய்கள், நீரிழிவு, சிறுநீரகக் கோளாறுகள் உள்ள விருச்சிக ராசியினர் இத்தகைய காலகட்டத்தில் மருத்துவப் பரிசோதனை செய்துகொள்வதும், உடல் நலனைக் கருதி அதிக உழைப்பைக் குறைத்துக் கொள்வதும் நல்லது.

தமிழ்நாட்டின் பிரபல
சோதிட சக்கரவர்த்தி
ஏ.எம்.இராஜகோபாலன்

**பொருளாதாரம்**

ஜூலை மாதம் முடிய நிதி வசதி நல்லபடியே நீடிக்கிறது. அதன் பிறகு எதிர்பாராத செலவுகளினால் பணப்பிரச்சினை ஏற்படுவதற்கு வாய்ப்புகள் உள்ளன. ஆதலால், இப்போதிலிருந்தே சிக்கனமாக இருந்து முடிந்தவரையில் சேமித்து வைப்பது எதிர்காலத்திற்கு உதவும்.

### 17.08.2003 முதல் 12.04.2004 வரை

ராகு உங்கள் ராசிக்கு 6 ஆம் இடமாகிய மேஷத்திற்கு மாறுவது மிகவும் உதவிகரமான கிரக மாறுதலாகும். ஆனால், குருபகவான் ஜீவன ஸ்தானத்திற்கு (சிம்மம்) மாறுவது நன்மை தராது. முயற்சிகள் அனைத்திலும் நல்ல பலன் கிடைக்கும்.

வேலை பார்க்குமிடத்தில் கடின உழைப்பும், வெளியூர்ப் பயணங்களும் தவிர்க்க இயலாதவை. தொழில் அதிபர்களுக்கும் புதிய பிரச்சினைகள் தலைதூக்கும். முக்கியமாக வெளியூர் வாய்ப்புக்கள் தடைப்படும் அல்லது குறையும். நிதிநிறுவனங்களின் ஒத்துழைப்பு கிடைக்காது.

(தனு ராசி நாளை)

# மக்கள் நலன்புரிச் சங்க தேசிய பயிற்சிப் பாசறை!

மக்கள் நலன்புரிச்சங்கப் படையணிகளினால் நடத்தப்பட்ட யாழ். மாவட்ட தொண்டர்களுக்கிடையிலான தேசிய பயிற்சிப் பாசறை கடந்த 10 ஆம் திகதி தொடக்கம் 13 ஆம் திகதிவரை கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெற்றது. இவ்விழாவின் இறுதிநாள் நிகழ்வில், யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் பத்மநாதன் பிரதம விருந்தினராகப் பங்குபற்றினார்.

சிறப்பு விருந்தினராக - இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரனும் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கமும், யாழ். செயலக தலைமை உதவி அரசாங்க அதிபர் வே.வீரகத்திப்பிள்ளையும் பங்குபற்றினர்.

நான்கு நாட்களாக நடைபெற்ற பயிற்சிப் பாசறை நிகழ்வில் - விளையாட்டு சம்பந்தமான போட்டிகளும் மற்றும் திசையறிதல், சமையல், முதலுதவி, வீதி ஒழுங்கு, தலைமைத்துவம், சிகரங்கள் அமைத்தல், பாசறை அமைத்தல் போன்ற பல செயற்பாடுகளும் இடம்பெற்றன.

இப்பாசறையானது ஒரு மனிதனை, தன் சுயதேவைகளைத்தானே நிறைவேற்றக்கூடியவாறு வளர்ப்பதுடன், அவனின் சகல விதமான திறமைகளையும் வெளியில் கொண்டு வருவதற்கும், ஊக்குவிப்பதற்கும் உதவுமென ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இப்பாசறையில் 31 பாடசாலைகளைச் சேர்ந்த 300 மாணவர்கள் பங்குபற்றினர். சகலவிதமான போட்டிகளிலும் பங்குபற்றி - முதலாம் இடத்தை தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி பெற்றது. இரண்டாம் இடத்தை கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலயமும், மூன்றாம் இடத்தை கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயமும் பெற்றன.



மக்கள் நலன்புரிச் சங்கத்தின் 13 ஆவது தேசிய பாசறையின் ஆரம்ப நிகழ்வில் தமிழீழ விடுதலைப்புலிகளின் யாழ்.மாவட்ட துணை அரசியற்துறைப் பொறுப்பாளர் செம்மணன் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைக்கின்றார். அருகில் தமிழீழ மாணவர் அமைப்பு யாழ். மாவட்ட பொறுப்பாளர் ந.இலக்கியனும், சங்கத்தின் தலைவர் இ.சற்குருநாதன், செயலாளர் வை.தயாமோகன் மற்றும் விசேட முதலுதவிப் படையணி அணித் தலைவர் கு.ஜெசிந்தன் ஆகியோரையும் படத்தில் காணலாம்.

# சின்னஞ்சிறு செய்திகள்

## வாள்வெட்டுக்கு மூவர் காயம்

(ஓட்டுமடம்)

அயலவர்களிடையே நீண்ட நாட்களாக நிலவிவந்த காணிப் பிரச்சினை கைகலப்பாக மாறியதில் வாள் வெட்டுக்கு இலக்கான மூவர் படுகாயங்களுடன் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

நேற்று முன்தினம் கைதடிப் பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில், இதேயிடத்தைச் சேர்ந்த வ.தர்மராசா (வயது 37), அ.தவராசா (வயது 32), சி.ஜெகதீஸ்வரன் (வயது 36) ஆகிய மூவருமே படுகாயங்களுடன் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(111)

## தலைமைத்துவ பயிற்சி

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை சாயி மந்திரினால் ஒழுங்கு செய்யப்பட்ட இளைஞர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சியின் முதல் நாள் நிகழ்வில், பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழக அங்கத்தவர்களில் ஒரு பகுதியினர் பங்குகொண்டு பயன் பெற்றனர்.

இந்நிகழ்வு யாழ். போதனா வைத்தியசாலை வைத்திய கலாநிதிகள் கணேசமூர்த்தி, சிவகணேசன், சிவராஜன் ஆகியோரால் நடத்தப்பட்டது. இந்நிகழ்வின் தொடர்ச்சி, ஏனைய அங்கத்தவர்கள் பங்குகொள்ள வசதியாக மிகவிரைவில் நடைபெறவிருக்கிறது எனத் தெரிவிக்கப்படுகிறது.

(116)

## வெள்ளிவிழாவும், விளையாட்டுப் போட்டியும்

பளை வண்ணாங்கேணி வடக்கு முன்பள்ளியின் வெள்ளிவிழாவும், வருடாந்த விளையாட்டுப் போட்டியும் இன்று பி.ப 1 மணியளவில் நடைபெறவுள்ளது.

இதில் கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் ஏ.சின்னத்தம்பி கலந்துகொள்ளவுள்ளார். (115)

## பயிற்சிநெறிக்கு விண்ணப்பிக்கலாம்

(வடமராட்சி கிழக்கு)

கரவெட்டி பிரதேச செயலகத்தினால் மரவேலை, மேசன் வேலை ஆகிய இருபயிற்சிநெறிகளில் இணைந்துகொள்ள இப்பிரிவில் வசிக்கும் 18 முதல் 30 வயதுக்கு இடைப்பட்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்கள் யாவும் வசிக்கும் கிராம அலுவர் ஊடாகவே அனுப்பப்படவேண்டுமெனவும், 6 மாத காலப் பயிற்சிநெறியில் பங்குபற்றுவோருக்கு பயிற்சிக்காலத்தில் ஊக்குவிப்புக் கொடுப்பனவாக மாதாந்தம் ரூபா 1000 வழங்கப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.(17)

## மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள்

வறுமைக் கோட்டுக்குக் கீழேயுள்ள மாணவர்களுக்கு யுனிசெப் மூலம் வழங்கப்பட்ட பாடசாலை உபகரணங்கள் - வடமராட்சிப் பாடசாலைகளுக்கு வழங்கப்படுவதாக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் தெரிவித்தார். (116)

## வாழ்க வளமுடன்




HAPPY BIRTHDAY

இரண்டாவது அகவையில்



பெயர் :சி.சங்கீர்த்தன்
முகவரி : கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

ஐந்தாவது அகவையில்

பெயர் : அ.டிலக்சன்
முகவரி : பூநகரி.



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------------

முகவரி :------------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.



------------------------
பெற்றார் ஒப்பம்

# புலிகளின் வேட்டைக்கு மத்தியிலும் பங்களாதேஷில் தேன் வேட்டை


காத்திருப்பு...!

பங்களாதேஷில் ஆபத்தான ஆனால், வருவாய் கொட்டும் தேன்வேட்டை சீசன் ஆரம்பித்துவிட்டது.

மே மாத இறுதிவரை நடக்கும் இந்தத் தேன் வேட்டைக்குச் சுமார் 300 தேன் வேட்டையாளர்கள் புறப்பட்டுச் செல்வார்கள். எனினும், இவர்களில் ஓரிருவர் திரும்பிவரப்போவதில்லை என்ற உறுதியான நம்பிக்கையுடன் இவர்கள் வேட்டைக்குக் கிளம்புவார்கள். ஆம், இந்த சுந்தர்பான்ஸ் அடர்காட்டினுள் வங்கப்புலிகளின் நடமாட்டம் அதிகம். இவற்றினால் வருடாந்தம்


துச்சமென ஒரு பயணம்.

சில தேன் சேகரிப்பாளர்கள் கொல்லப்பட்ட போதிலும், வருமானம் தரும் தொழில் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டுதான்

## பங்களாதேஷில்

இருக்கிறது.

தேன் வேட்டையில் ஈடுபவர்கள் பெரும்பாலும் விவசாயிகளே. இவர்கள் வருடத்தில் ஆறு மாதங்கள் தொடர்ச்சியாக விவசாய


உயிரினுமினிது தேன்!

## தேன் வேட்டை

வேலை செய்த பின்னர் - எட்டு வாரங்களுக்கு இந்தத் தேன் வேட்டையாடக் கிளம்பிவிடுவர்.

காட்டின் சகல பகுதிகளிலும் வங்கப் புலிகளின் காலடித்தடங்கள் பதிருந்திருந்தாலும் - உயிரைத் துச்சமென மதித்து நடக்கும் இந்த வேட்டைக்குப் முன்பதாக இறைவனை வேண்டும் மத சம்பிரதாயங்களும் நடக்காமலில்லை.

# தனியாரின் விண் திட்டம்

உலகைச் சுற்றி, எங்கும் தரிக்காமல், எரிபொருள் இடையில் நிரப்பாமல் விமானம் ஒன்றில் பறந்து சாதனை படைத்த பேர்ட் ருடான் என்பவர் தாம், தனிப்பட்ட ரீதியில் விண்வெளிப் பயணம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளதாக அறிவித்துள்ளார்.



கலிபோர்னியாவில் இவர் அமைத்துள்ள விண்தளத்தில், இவர் தனது விண்வெளிப் பயணத்துக்கான விண்கலத்தின் பாகங்களைச் செய்தியாளர்களுக்கு நேரில் காட்டியுள்ளார்.



அரசசார்பற்ற - ஓர் தனியார் விண்வெளித் திட்டமாக இதுவே விளங்கவுள்ளதாக அதிகாரிகள் கூறுகின்றனர்.



தனது பெருந் திட்டத்தின் நடுப்பகுதியே தற்போது நடந்து வருவதாகக் குறிப்பிட்டிருக்கும் பேர்ட் ருடான் -

தனியாரும் விண்ணுக்குச் செல்லும் நாள், உலகிற்கு ஓர் பாய்ச்சலாக இருக்குமென மகிழ்கின்றார்.

# உலகப் புகழ் பெற்ற இயக்குநர்கள்

## ஐஸென்ஸ்ரைன்

கிரி.ஃபித்துக்கு அடுத்தபடியாகச் சினிமாவுக்கு அழகுசேர்த்த பெருமை ரஷ்யத் திரைப்படங்களையே சேரும். சினிமாவின் வடிவத்தைக் கூறாகப் பிரித்து வளப்படுத்தி, கலையழகு மிளிரும் வண்ணம் அதை மெருகேற்றியது ரஷ்யக் கலைஞர்களின் சாதனை. வெறும் கற்பனைத்திறன், கலைநோக்கு போன்றவை


ஐஸென்ஸ்ரைன்

மட்டுமே இதன் அடிப்படையல்ல, ஆழமான சித்தாந்தப் பிடிப்பும், ஈடுபாடுமே இதற்கான காரணங்களாகக் கருதப்படுகின்றன. ஒக்ரோபர் புரட்சியின் காலமான 1917 ஆம் வருடம் வரையிலும் ரஷ்யாவில் நல்ல திரைப்படக் கம்பனியென்று எதையும் குறிப்பிட முடியாது.

ஆனால், சினிமாத்துறை தவிர மற்றக் கலைகளிலும் மறுமலர்ச்சியும், முன்னேற்றமும் ஏற்படத்தொடங்கியிருந்தன. இத்தாலியரான மாரிநெட்டின் (MARIKNET) புதிய சிந்தனைகள் - ஃபியூச்சரிஸம் என்ற பெயரில் ரஷ்யாவின் பல துறைகளிலும் ஆதிக்கம் செலுத்தியது. அதேபோல், மெயர் ஹோல்ட் (MAYOR HOLT) என்பாரின் முயற்சியால் நாடகங்கள் கலைவடிவங்கள் பெற்றன. ரஷ்ய சினிமாவின் வளர்ச்சிக்கு இவை இரண்டுமே பெருமளவு துணைபுரிந்தன.

இந்தக் காலகட்டத்தில்தான், லெவ் குளோஷெவ் (LEVU KULOSHOV) சினிமாவில் புதிய பரிசோதனை முயற்சிகளில் ஈடுபட்டார். குளோஷெவ் எடிட்டிங் துறையில் அற்புதமான மாற்றங்களை ஏற்படுத்திச் சீரமைத்தார். ஒருதடவை குளோஷெவ் பல இடங்களில், பல சமயங்களில் எடுக்கப்பட்ட காட்சிகளை இணைத்தபோது, அதிலிருந்து முழுமையான மாறுபட்ட ஒரு வடிவம் கிடைப்பதை உணர்ந்தார். ரஷ்ய சினிமா வளர்ச்சிக்கு அப்போதைய இரண்டு பிரச்சினைகள் பெருமளவு உதவின. ஒன்று ஃபிலிம் தட்டுப்பாடு. இதனால் ஏற்கெனவே எடுத்த படங்களை மாற்றி மாற்றி வெட்டி ஒட்டிப் பரிசோதனைகள் செய்யவேண்டியிருந்தது.

இரண்டாவதாக, போதுமான அளவுக்கு வெளிநாட்டுப் படங்களைப் பார்க்கமுடியாமல் இருந்தநிலை. அதிர்ஷ்டவசமாகக் கிரி.ஃபித்தின் 'இன்ரெலரன்ஸ்' படத்தின் ஒரு பிரதி திருட்டுத்தனமாய் ரஷ்யாவுக்குள் வநதது. குளோஷெவ்வின் சீடர்களில் ஃபுடோவ்கின் (PUDOVKIN) முக் கியமானவராக இருந்தார். குளோஷெவ்விடம் தொடர்பில்லாது இருந்த ஐஸென்ஸ்டைனிடம்கூட குளோஷெவ்வின் சாயல்கள் நிறைய உள்ளன.

1920 இல் என்ஜினியரிங் பட்டம்பெற்ற இளைஞரான ஐஸென்ஸ்ரைன் - பிரோலிட்கல்ட் தியேட்டரில் (நாடக கம்பனியில்) சேர்ந்தார். ஒரு வருடம் கழிந்து மெயர் ஹோல்டின் ஸ்டேட் ஸ்கூல் ஃபார் ஸ்டேஜ் டைரக்ஷன் கல்லூரி மாணவராகச் சேர்ந்தார். அப்பொழுதுதான் அவர் இன்ரெலரன்ஸ் படத்தைப் பார்க்கும் வாய்ப்புப் பெற்றார். இப்படம், அவருக்குள் மிகுந்த பாதிப்பை ஏற்படுத்தியது. 1923 ஆம் வருடம் நாடகத்தில் பயன்படுத்துவதற்காக ஒரு சிறிய திரைப்படம் எடுத்தார். 1924 ஆம் வருடத்தில் 'புரோலிட்' நிறுவனத்திற்காக 'ஸ்ரைக்' (STRIKE) என்ற படத்தை இயக்கும் வாய்ப்புக் கிடைத்தது. மற்றொரு படத்தை அடுத்ததாக இயக்கத் திட்டமிட்டிருந்த இவர், அதைக் கைவிட்டு 'பற்றில் ஷிப் பொடம்கின் (BATTLE SHIP POTEMKIN) படத்தை இயக்கி வெளியிட்டார். வெளியான வருடம் 1925. இந்தப்படம் உலக அளவிலான மிகச்சிறந்த படங்களுள் ஒன்றாக இன்றும் மதிக்கப்படுகிறது.

பொடம்கின் என்கிற ஒரு இராணுவக் கப்பலிலுள்ள ஊழியர்கள் அழுகி, புழுப்பிடித்த இறைச்சித்துண்டுகளைச் சாப்பிட மறுப்பதிலிருந்து படம் தொடங்குகிறது. இது கப்பலில் ஒரு கலகத்துக்கு வழிகோலுகிறது. கப்பல் ஓடேஸா துறைமுகத்தை அடைவதற்குள் கலகம் வெடித்து, பெரிய மோதலாக மாறுகிறது. கடைசியில் கலகக்காரர்கள் வெற்றி பெறுகின்றனர். இந்தநிலையில்தான் கப்பல் தரையை


பற்றில் ஷிப் பொடம்கின் படத்தில் ஒரு காட்சி.

அணுகுகிறது. வெற்றியடைந்த வீரர்களையும், மரணமடைந்த வீரர் களையும் பார்க்க ஊர் மக்கள் திரண்டுவருகின்றனர். சட்டென்று அங்கே தோன்றிய குரூரமான இராணுவத் தினர் திரண்டிருக்கிற மக்களை எதிர்பாராதவிதமாகச் சுட்டுத் தள்ளுகின்றனர்.

(தொடரும்)




# இங்கிலாந்தில் சரணாலயம் காட்டுத் தீயினால் நாசம்



இங்கிலாந்தின் லங்காஸ்ரர் பகுதியில் ஏற்பட்ட பெரும் காட்டுத் தீ - இப்பகுதியில் வசிக்கும் அரிய வேட்டைப்பறவைகளை அழிக்கும் ஆபத்தை உருவாக்கியுள்ளது.

சர்வதேசரீதியில் பிரபலமான பறவைகளின் இனப்பெருக்க வலயங்கள் இப்பகுதியிலேயே காணப்படுகின்றன. காட்டுத் தீயினால் இவை அழிந்துள்ளதால், இப்பறவையினங்கள் தப்பிப்பிழைக்கும் வாய்ப்பு குறைந்துவருவதாக இங்கிலாந்தின் சூழல் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

250 ஹெக்ரயர் பரப்பளவான இந்த சதுப்புப் பிரதேசம் தீயினால் பாதிக்கப்பட்டுள்ளது. தீயினால் இந்தக் காட்டுப்பகுதிகளின் மரங்களிலிருந்த தமது கூடுகளும் எரிந்து சாம்பலாகிவிட்டதை அறிந்த பறவைகள் - உரத்த குரல் எழுப்பியபடி, வானில் பறந்து திரிந்தது - பெரும் வேதனையைத் தருவதாக இருந்தது என - அப்பகுதிக்கான வனவிலங்குகள் சரணாலய அதிகாரி சேர். மார்ட்டின் டெரைற்றி கூறுகின்றார்.

# புராதன பரம்பரை அலகுகள் சைபீரியப் பனியினுள் மீட்பு!

உலகின் மிகப் புராதனப் பரம்பரை அலகு (DNA) சைபீரியாவில் பனியில் உறைந்த நிலையிலிருந்து மீட்கப்பட்டுள்ளது. நான்கு லட்சம் வருடங்களுக்கு முன் வாழ்ந்த ஓர் தாவரத்தின் பரம்பரை அலகாக இது


மம்மூத் யானையின் எச்சம்.


கிழக்கு சைபீரியாவின் கடற்கரை.

இருக்கும் என நம்பப்படுகின்றத.

பூமியில் இதுவரை மீட்கப்பட்ட புராதனப் பரம்பரை அலகுகளில் இதுவே மிக ஆதியானது எனக் கருதப்படுகிறது. இப்பகுதியில் மேலும் அக்காலத்தில் வசித்த மம்மூத் எனும் கம்பளி யானை, மான் இனங்கள், கம்பளி எருதுகளின் பரம்பரை அலகுகளின் படிவுகளும் பனியில் உறைந்த நிலையில் காணப்படுகின்றது. இந்தப் பரம்பரை அலகுப் படிவங்களை ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் பரிசோதித்து வருகின்றனர்.

# இளம் விலங்குகளுக்கு



அநாதரவானநிலையில் காணப்படும் இளம் மிருகங்களை மனிதன் எடுத்து பராமரிப்பதைவிட, அவற்றை இயற்கையாக அவற்றின் சூழலில் விடுவதே அவற்றின் வளர்ச்சிக்கு அதிக பயன்தரும் என்கிறது மிருகவதைகளுக்கு எதிரான ரோயல் கழகம்.

# இயற்கையே சிறந்தது

இயற்கையிலிருந்து அவற்றைப் பிரித்துச் செயற்கையான சூழலில் அவற்றை மனிதன் பராமரிக்கும்போது அவ்விலங்குகள், அச்சம் மற்றும் சூழலில் தப்பிவாழும் தந்திர இழப்பு என்பவற்றால் பாதிக்கப்படும். இதனால், இவற்றை மீண்டும் அவற்றின் சொந்த இடங்களுக்குக் கொண்டு சென்றுவிடும்போது, வாழ்வதற்காகப் போராடவேண்டிய சூழ்நிலை ஏற்படும் என்கின்றனர் இக்கழகத்தினர்.





# வாரம் ஒரு யோகாசனம்

## யோக முத்திரா



விரிப்பில் பத்மாசனம் போட்டு நிமிர்ந்து இருக்கவும். கைகளால் இரு குதிக்கால்களையும் மடித்துக்கொண்டு, சுவாசத்தை வெளிவிட்டபடி, நிலத்தில் முகம் தொடவேண்டும். 3 முறை 10 விநாடிகள் சுவாசம் உள்வெளி இழுத்தபடி நின்று, பின் நிலத்தைவிட்டு மேல் எழுந்து சுவாசத்தை இழுத்தபடி ஆரம்பநிலைக்கு வரவும். இதேபோல், 6 தடவைகள் செய்யவேண்டும். பின்புறமாகக் கைகளை மாற்றி, கால்விரல்களைப் பிடிக்கவும். குனிந்து நிலத்தில் முகம் தொடவேண்டும்.

**யோக முத்திராவின் நன்மைகள்**

முன் குனிவதால், முதுகெலும்பு பலம் பெறுகின்றது. அதைத் தொட்ட நரம்புகளும் விரிவடைகின்றன. கல்லீரல், மண்ணீரல், பங்கிரியாஸ், பித்தப்பை, சிறுகுடல், இரைப்பை, பெருங்குடல் நசுக்கப்பட்டு, அழுக்குகள் வெளியாகிச் சுத்தமடைந்து பலமடைகின்றது. மலச்சிக்கல் போகிறது. குடல் வளரி நசுக்கப்பட்டு, அழுக்கு வெளியாகி குடல் வளரியின் சுத்தம் பேணப்படுகின்றது.

கற்றுத்தருபவர் – **மா.மகாநேசன்** *(கரவெட்டி)*

# திரை விமர்சனம்



# காலாட்படை



முற்றிலும் புதுமுகங்களை வைத்து இப்படத்தைப் படைத்திருக்கிறார் இயக்குநர்.

நண்பனின் தங்கையைக் காதலிக்கும் ஜெய், அதே நண்பனால் நையப்புடைக்கப்படுவதும், நண்பர்கள் கோஷ்டி இரண்டாகப் பிரிந்து ஒருவரையொருவர் அடித்துக் கொள்வதும்தான் படத்தின் கதை.

நண்பர்கள் என்ற பெயரில் சில உப்புக்குச் சப்பாணிகளும் இருக்கிறார்கள். அவர்களை நீக்கிவிட்டுப் பார்த்தால் தேறு வது புதுமுகம் ஜெய்யும், அருணும்.

நாற்பது வயதைத் தாண்டிய இயக்குநர் ரமேஷின் மனசில் பசுமையாக நின்றுபோன காதல் நினைவுகள்தான் படமே. என்னவொரு கற்பனை என்று வியந்து பாராட்ட நிறையச் சமாச்சாரங்கள் வைத்திருக்கிறார் படம் நெடுகிலும்.

கோவிலுக்கு அத்தையுடன் வரும் காதலியைத் தனியாகச் சந்திக்க அத்தையின் செருப்பை மிதித்து அறுத்துவிட்டு ஓடும் குறும்பு. காதலிக்குத் தரும் பரிசில்- செருப்பை மிதிப்பதாய் கால்களுக்கு நினைப்பு, கால்களைச் சுமப்பதாய் செருப்புக்கு மதிப்பு என்ற வாசகம். மனிதருக்குப் பழைய பாடல்களில் அலாதிப்பிரியம் போலும். காகித ஓடம் பாடலை இடத்திற்கேற்றபடி பயன்படுத்தியிருக்கும் அந்த அழகை மெச்சலாம்.

ராமன் எத்தனை ராமனடி... பாடலைக் கேட்டு காதலன் பிரிவை ஆற்றிக்கொள்ளும் நாயகியும் அந்தக் கசற்றைப் பிடுங்கி உள்ளேயிருக்கும் நாடாவை உருவிப்போடும் அண்ணனும் யதார்த்தத்தின் விம்பங்கள்.

ஏணிக்கே ஏணிபோல் இருக்கிறார் புதுமுகம் ஜெய். நிஜத்தை உணர்ந்து வில்லன் வேடத்திற்கு ஆம் போட்டால் கோலிவுட்டின் பச்சைக் கம்பள வரவேற்பு நிச்சயம். இந்தப் படத்தைப் பொறுத்தவரையில் கொடுத்த வேலையை நிறைவாகச் செய்திருக்கிறார்.

ஹீரோயின் விதுவிடம் அப்படியொரு குடும்பப்பாங்கு. ஓடிப்போயிடலாம் என்று அழைக்கும் ஜெய்யிடம், நீ எவ்வளவு சம்பாதிக்கிறே என்று கேள்வி கேட்பது நெற்றியடி. இப்படி ஒவ்வொரு பெண்ணும் விபரமாக இருந்தால் காதலுக்குச் சமாதிதான்.

விதுவின் அண்ணனாக வரும் அருண், கண்களில் ஒரே கலவரம்! இறுக்கமாகவே இருக்கிறார் படம் முழுக்க. படத்தின் பின்பகுதியில் சில நிமிடங்கள் ஆளையே காணோம். இவரும் இனி வில்லனாகலாம்.

அந்தணர்கள் மேல் அப்படியென்ன கோபமோ விளாசித் தள்ளியிருக்கிறார் இயக்குநர். ராதாரவி, தலைவாசல் விஜய் போன்றவர்களின் நடிப்பு அலுப்பைத் தருகிறது. பசியும் போச்சு, அதிலும் ராதாரவியின் பிரசங்கம் மார்கழி மாதத்தின் பஜனை.

பரத்வாஜ் இசையும், சீனுவின் ஒளிப்பதிவும் பசுமை, உற்சாகம்.

இந்தக் கூட்டணியின் உற்சாகப் பவனி ஓ.கே தான்! ஆனால், நத்தையின் முதுகில் ஏறி நகர்வலம் வந்திருக்கிறார்களே என்பதுதான் உறுத்தலோ உறுத்தல்! ❄

# குழந்தைகளுக்கு தண்டனைகளை எப்படித் தீர்மானிக்கிறீர்கள்?

(சென்ற வாரத் தொடர்ச்சி...)

ஒழுங்கு என்பது என்ன? எமது சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தச் சில சம்பிரதாயங்களைக் கடைப்பிடிக்கிறோம். சில சட்டதிட்டங்களின்படி அதைச் செய்கிறோம். நாமே ஏற்படுத்திக்கொண்ட தடைகளே ஒழுங்கு எனலாம். நான் எனக்குச் சட்டதிட்டம் போட்டு அதன்படி கடைப்பிடிக்கிறேன். மனமுதிர்ச்சி அடைந்த ஒருவருக்கு நாட்டில் சட்டதிட்டங்கள் தேவையில்லை. காரணம், அவர் தனது வாழ்வில் அவற்றைச் சரியாகக் கடைப்பிடிப்பதாலேயேயாகும். ஆகவே, மற்றவரது சுதந்திரத்தைப் பாதுகாக்கும்விதத்தில் எமது சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துவதே ஒழுங்கு என்கிறோம்.

ஒழுங்கு என்பது சிறுவர்களுக்கு மட்டுமல்ல, பெரியவர்களுக்கும் தேவையான ஒன்றாகும். எமது சமுதாயத்தில் இன்று ஒழுங்கு குறைந்துள்ளது. மற்றவரது சுதந்திரத்திற்கு என்ன நடக்கிறது என்பதை நாம் எண்ணுவதில்லை. ஒழுங்கு என்பது புகையிரதத்தின் முன்னோக்கிய பயணத்துக்காக இருக்கும் ரயில் தண்டவாளம் போன்றது என்று கூறினால் மிகையாகாது. ஒரு புகையிரதம் ஓடுவதற்குத் தண்டவாளம் தேவைப்படுகிறது. தண்டவாளம் இருப்பதால் புகையிரதம் பக்கவாட்டில் செல்வது தடைப்படுகிறது. முன்னோக்கிச் செல்ல உதவுகின்றது. இங்கே பக்கவாட்டில் செல்லாது புகையிரதத்தின் பயணம் ஓரளவு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. காரணம், குறிக்கோளை நோக்கிப் பயணஞ்செய்ய அவசியமாகவிருப்பதால் தண்டவாளம் தேவைப்படுகிறது.

ஒழுங்கு என்பது இதைப்போன்ற ஒன்றுதான். நானே எனக்குச் சட்டதிட்டத்தைப் போடுவதாயிருந்தால் மிகவும் நல்லது. அப்போது மற்றையோர் என்னைக் குறைசொல்ல மாட்டார்கள். ஒழுங்கு என்பது அளவுக்கு அதிகமாகச் சட்டதிட்டத்தை இலகுவாக்குவதோ, அளவுக்கு அதிகமாகச் சட்டதிட்டத்திற்கு அடிமையாக்குவதோ அல்ல. நல்வாழ்வு வாழ்வதற்காகத் தேவைக்கேற்ப ஓரளவு சட்டதிட்டம் தேவையானது. அவை மட்டுப்படுத்தப்பட்டதாகக் குடும்பத்தில் இருக்கவேண்டும். பிள்ளையின் வளர்ச்சிக்கு உதவும் விதத்திலேயே பெற்றோர் சட்டதிட்டங்களைப் போட வேண்டும். அவை பிள்ளையின் மனவளர்ச்சிக்குத் தடையாக உள்ளனவா என்று பார்த்துக்கொள்ள வேண்டும். பிள்ளை தனது பிரச்சினைகளை வீட்டில் வந்து பெற்றோருக்குச்சொல்லும்போது பெற்றோர் பெரும்பாலும் சட்டதிட்டங்களைக் கூட்டுவார்கள். அப்படி பெற்றோர் செயற்பட்டதும் பிள்ளை ஒன்றுமே பெற்றோருக்குச் சொல்ல விரும்பாது போகலாம். காரணம், நான் இதைச் சொன்னால் சட்டதிட்டம் கூடலாம் என்ற பயம் மனதில் எழக்கூடும்.

சட்டதிட்டங்கள் தேவையானவையே. அவை பிள்ளையின் மனவளர்ச்சிக்கு உதவும் விதத்திலேயே இருக்கவேண்டும். அதே போன்று, பிள்ளையின் மனமுதிர்ச்சிக்கேற்பவே சட்டதிட்டம் விதிக்கப்படவேண்டும்.

குடும்பத்தில் ஒரு பிள்ளையைக் கடைக்குத் தனியே அனுப்பக்கூடியதாக இருக்கும். மற்றொரு பிள்ளையை வீட்டில் வெளிக்கதவு வரையில்கூடத் தனியாக அனுப்பமுடியாதநிலை இருக்கலாம். இங்கே ஒரு பிள்ளை பொறுப்புடன் நீண்டதூரம் தனியாகப் போகக்



கூடிய மனவளர்ச்சியைப் பெற்றுள்ளது. மற்றப்பிள்ளை அவ்வாறு பெறவில்லை. ஆகவே, பிள்ளையின் மனமுதிர்ச்சியைக் கவனித்தே இவற்றைச் செய்யவேண்டும்.

பெற்றோர் தமது பிள்ளைக்குத் தண்டனை கொடுக்க எத்தனிப்பது பிள்ளையின் நன்மைக்காகவே. திரும்பவும் அதேகஷ்டத்தில் விழாதிருக்கவே. பிள்ளை பிழைவிட்டதும், அப்பிள்ளைக்குத் தண்டனை கொடுப்பதை விடுத்து பிள்ளை செய்யும் நல்ல செயல்களைப் பாராட்டுவதன் மூலம் பிழையைத்தானே திருத்திக்கொள்ள உதவலாம். இதை அடிக்கடி செய்வதால் பிள்ளைகள் பிழைவிடுவது குறையலாம்.

நாம் பெரும்பாலும் பிழையான செயலுக்குத் தண்டனை கொடுக்கப் பழகியுள்ளோம். நல்ல செயற்பாடுகளைப் புகழ்வதில்லை. சிலவேளைகளில் நல்லவிதத்தில் பிள்ளை செய்தாலும், அப்பிள்ளையைப் பாராட்டாது, அதைப் பகிடி பண்ணும் விதத்தில் "இண்டைக்கு மழை பெய்யப்போகுது", "அதுதான் இண்டைக்கு மழை பெய்யுது" போன்ற வார்த்தைகளைப் பாவித்துப் பகிடி பண்ணுகிறோம்.

பெற்றோர் பிள்ளைக்குக் கொடுக்கும் தண்டனை, சரீர, மனவேதனையை ஏற்படுத்தக்கூடியதாகவே இருக்கிறது.

ஒருநாள் ஒரு தந்தை என்னிடம் கூறினார்-"என்ரை பிள்ளையை இண்டைக்குக் கண் சிவக்கும்வரை தலைகீழாய்க் கட்டிப்போட்டு விட்டு வருகிறேன்" என்றார். மற்றொரு தந்தை என்னிடம் வந்து "எனது மகள் அடுத்த வீட்டு இளைஞனுடன் காதல் தொடர்பை ஏற்படுத்திவிட்டாள். அவளின் கை, கால்களைக் கட்டிப்போட்டு வீட்டில் பூட்டி வைத்துள்ளேன். தூர இடத்தில் பிள்ளையை விடுவதற்கு ஒரு மடம் தேடித்தர முடியுமா?' என்றார். இப்படிப்பட்ட தண்டனைகள் பிள்ளைக்குப் பொருத்தமற்றவையாகும்.

இத்தண்டனைகளால் பிள்ளைகள் தமது செயற்பாடுகளை மனதில் அடக்கி வைக்கின்றனர். ஆனால், தமது பழக்கங்களை மாற்ற முற்படமாட்டார்கள். ஆசிரியர் இருக்கும்போது, மாணவர் ஆசிரியருக்குப் பயத்தில் சத்தம் போடாமல் இருப்பர்.

(தொடரும்....)

- எஸ்.ஜே. யோகராஜா

ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு
செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும்.
- திருக்குறள்.

# நமது நோக்கு

## அமைதியைத் தொலைவாக்கும் படைத்தரப்பும் அரசாங்கமும் !

கடற்பரப்பில் ஏற்படுகின்ற பிரச்சினைகளையும் மோதல்களையும் தணித்துக்கொள்ளவும், தவிர்த்துக்கொள்ளவும்- விடுதலைப் புலிகளின் கடற்புலிகளை தனியொரு கடற்படையாக அங்கீகரிக்க வேண்டுமென போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு சிபார்சு செய்திருக்கிறது.

தரையில் எவ்விதம் விடுதலைப் புலிகள் தமது கட்டுப்பாட்டுப் பகுதிகளை வைத்திருக்கின்றனரோ - அவ்விதமே கடலிலும் கடற்புலிகளுக்கான கட்டுப்பாட்டுப் பிராந்தியம் இருக்கின்றது என்பதையும், அதில் அவர்கள் நடமாடவும், செயற்படவும், பயிற்சிகளை மேற்கொள்ளவும் அனைத்து உரிமைகளையும் கொண்டிருக்கின்றனர் என்பதையும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு வலியுறுத்தியிருக்கிறது.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் சிபார்சுகளடங்கிய அறிக்கையின் பிரகாரம் - கடற்புலிகளை தனித்தொரு கடற்படையாகக் கருதுவதன் மூலமே, அங்கீகரிப்பதனாலேயே இலங்கையின் கடற்பகுதிகளில் அமைதி நிலவும் என்பதைக் கண்காணிப்புக்குழு தெளிவாக உணர்த்தியிருக்கிறது.

இலங்கையின் கடற்படைக்குச் சமதையாகக் கடற்புலிகள் வளர்ச்சி பெற்றிருப்பதை, பலங்கொண்டிருப்பதை உணர்ந்து - இந்தச் சமபலம் கடலில் பேணப்படுவதன் மூலம் மட்டுமே - கடற்பிராந்தியத்தில் முறுகல்நிலையை, மோதலை தவிர்த்துக்கொள்ளலாம் என்ற யதார்த்தத்தை கண்காணிப்புக்குழுவின் சிபார்சுகள் உறுதிப்படுத்தியிருக்கின்றன.

ஆனால் - கண்காணிப்புக்குழுவின் சிபார்சுகளை ஏற்றுக்கொள்ள முடியாதெனவும், விடுதலைப் புலிகளின் கடற்படையை அங்கீகரிக்கக் கோருவது ஆபத்தானது என்றும் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி அறிவித்திருக்கிறார்.

அரசாங்கத்திடம் இதுபற்றி தாம் உறுதியாகத் தெரிவித்து விட்டதாக அவர் குறிப்பிட்டிருப்பதுடன் - கடற்படைத் தளபதியின் எதிர்ப்பையும் மறுதலிப்பையும் கருத்திற்கொண்டே அரசாங்கமும் தனது பதிலைக் கண்காணிப்புக் குழுவிற்கு அறிவித்திருப்பதாகத் தெரியவருகிறது.

கண்காணிப்புக்குழுவின் சிபார்சுகளில் - இரண்டு தரப்புப் படகுகளுக்குமான இடைத்தூரம் ஒருகடல் மைலாக ஆகக் குறைந்தது இருக்க வேண்டுமென்ற சிபார்சு மட்டுமே கடற்படையாலும், அரசாங்கத்தாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

அதேவேளை - கண்காணிப்புக்குழு சிபார்சு செய்த, மேலும் சில முக்கியமான விடயங்களும் நிராகரிக்கப்பட்டு விட்டதாகவே தெரியவருகின்றது.

குறிப்பாக - இரு தரப்பினரின் கடற்பிரிவுகளும் தவறான புரிந்துணர்வைத் தடுக்கவும், முக்கிய தகவல்களைப் பரிமாறிக்கொள்ளவும், கடலில் இருக்கும்போது - சர்வதேச கடற்போக்குவரத்து தொடர்பாடல் அலைவரிசைக்கு வரவேண்டும் என்பதுடன்,

தமது போக்குவரத்துக்கும் ஆட்களைக் கொண்டு செல்லவும் - இரு தரப்புக்கும் இடையில் பாதுகாப்பான, சட்டரீதியான கடல் விநியோகக் கோடுகளை உருவாக்கிக் கொள்ள இருதரப்பும் கலந்துரையாட வேண்டும் என்ற சிபார்சுகள் - எவ்வகையிலும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதவை எனக் கடற்படைத் தரப்பால் அறிவிக்கப்பட்டிருப்பதாகப் படை வட்டாரங்களிலிருந்து கிடைத்த செய்திகள் மூலம் அறியமுடிகின்றது.

இந்தவகையில், வட-கிழக்குக் கடற்பரப்பில் தாம் மட்டுமே மேலாதிக்கம் செலுத்த வேண்டும் - கடற்புலிகளது நடவடிக்கைகள் அனைத்தும் கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்ற பிடிவாதத்துடன் கடற்படைத்தரப்பு குறிகொண்டிருப்பது வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

ஏற்கனவே - கடலில் பாரதூரமான சம்பவங்கள் பலவற்றுக்கும் விடுதலைப் புலிகள் தீவிரமாக ஆத்திரமூட்டப்பட்ட நிகழ்வுகளுக்கும் பொறுப்பாளியான கடற்படை - கடற்பகுதியில் இணக்கமான, அமைதியான சூழல் ஒன்று ஏற்படுவதை விரும்பாமல் - போர்நிறுத்த விதிமுறைகளுக்கு மதிப்பளிக்காமல் செயற்படும் போக்கில் நடந்து கொள்வதைத்தான் - கண்காணிப்புக்குழுவின் சிபார்சுகளுக்கான கடற்படையின் எதிர்வினை எடுத்துக்காட்டுகின்றது.

அமைதியை ஏற்படுத்துவதிலும், இணக்கத்தைப் பேணுவதிலும் கடற்படை முட்டுக்கட்டையாக இருந்து வருகின்றதென்ற விடுதலைப் புலிகளின் குற்றச்சாட்டையும் கடற்படைத் தளபதி ஜனாதிபதியின் ஆசீர்வாதத்துடன் செயற்படுகிறார் என்ற தகவலையும் இந்த நடவடிக்கைகள் மேலும் உறுதிப்படுத்துகின்றன.

அதேவேளை - கடற்படையின் நிலைப்பாட்டிற்கு இசைந்துபோகுமாப்போல, கடற்படையின் பிடிவாதத்தை வழிமொழியுமாப்போல - அரசாங்கத் தரப்பிலிருந்து - பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ கருத்து வெளியிட்டிருப்பது - உயர்பாதுகாப்பு வலயப் பிரச்சினை போல, கடற்பிராந்திய மோதல் தணிப்பு நடவடிக்கைகளும் இழுத்தடிப்புக்கு உள்ளாக்கப்பட்டுவிடும் என்ற சந்தேகத்தை உருவாக்கியிருக்கிறது, வலிதாக்கியிருக்கிறது.

படைத்தரப்பும், அரசாங்கமும் இவ்வாறு ஒவ்வொரு விடயங்களையும் பிரச்சினைக்குரியவையாகவும், திட்டமிட்ட தாமதத்திற்கும், முரண்பாடுகளுக்கும் களமாக்குவதும் - தமிழர் தரப்பின் அமைதியின்பாலான நம்பிக்கையை இன்னுமின்னும் சிதைவடையவே செய்துவிடும்.

# சதாம் ஹுசைன் தப்பி ஓடுவார் என்று நான் ஒருபோதும் நினைக்கவில்லை!

## இலங்கைக்கான ஈராக் தூதுவர் அப்பாஸ் பேட்டி


ஈராக்கிய தூதுவர்
வாஸ்டி அப்பாஸ்

சதாம் ஹுசைன் அமெரிக்க டாங்கிகளுக்கு முன்பாகத் துப்பாக்கி ஏந்திப் போரிட்டு மாவீரனாக மரணமடையாததை எண்ணித்தான் மனவருத்தப்படுவதாக, இலங்கைக்கான ஈராக் தூதுவர் வாஸ்டி அப்பாஸ் தெரிவித்துள்ளார்.

ஈராக்கில் ஏற்பட்ட மாற்றங்கள் குறித்து அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்-

சதாம் ஹுசைன் போரிட்டு மாவீரனாக மடியாதது மன வருத்தத்துக்குரிய விடயம். அவர் தனியே துப்பாக்கி ஏந்தி அமெரிக்க டாங்கிகளுக்கு முன்னால் நின்று போரிட்டிருந்தால், வரலாற்றில் அவருக்கு முக்கிய இடம் கிடைத்திருக்கும்.

1961 ஆம் ஆண்டின் வியன்னா மாநாட்டுத் தீர்மானத்துக்கமைய இலங்கை அரசாங்கம் என்னைப் பாதுகாக்க வேண்டும். என்னை அரசாங்கம் ஒரு இராஜதந்திரியாக தொடர்ந்தும் மதிக்க வேண்டும்.

நான் தொடர்ந்தும் ஈராக்கியத் தூதுவராகவே பதவியில் இருக்கிறேன். ஈராக்கில் புதிய அரசு பதவியேற்கும்வரை எனது பணி தொடரும். மார்ச் 21 ஆம் திகதி பாக்தாத்துடனான தொலைபேசித் தொடர்புகள் துண்டிக்கும்வரை, ஈராக் அரசுடன் நாம் தொடர்புகளை வைத்திருந்தோம்.

அதுபோலவே டமாஸ்கஸ், ஜோர்தானிலுள்ள தூதுவர்களும் தொடர்புகளை வைத்திருந்தார்கள்.

இன்று அமெரிக்கா ஈராக்கை ஆக்கிரமித்திருந்தாலும், அமெரிக்காவினால் ஈராக்கை நிர்வாகப்படுத்த முடியாது. ஈராக்கை நிர்வாகப்படுத்த வேண்டுமானால் அங்குள்ள 15 இலட்சம் அரசாங்க ஊழியர்களின் ஒத்துழைப்பைப் பெற வேண்டும்.

ஈராக்கில் சுமுக நிலையை ஏற்படுத்துவதற்காக நஸ்ரியாவில் அமெரிக்கா ஒரு மாநாட்டை நடத்தியிருந்தது. இந்த மாநாடு ஜனநாயக ரீதியானதல்ல. இந்த மாநாட்டுக்கு அழைத்து வரப்பட்ட எதிர்க்கட்சித் தலைவர்கள் மேற்குலகத்திலிருந்தே வந்தனர். இவர்கள் ஈராக்கிற்கு எப்போதோ ஒரு முறை மட்டுமே வந்து சென்றவர்கள். இவர்களை ஈராக் மக்கள் ஏற்கமாட்டார்கள்.

மக்களையும், அவர்களின் விருப்பு வெறுப்புக்களையும் ஒதுக்கிவிட்டு ஈராக்கில் அமெரிக்கா ஒரு அரசாங்கத்தை அமைக்க முயன்றால், அது சிவில் யுத்தத்தையே ஏற்படுத்தும். ஈராக்கில் பல இனங்கள் இருக்கின்றன. இதனால், நிலைமை சிக்கலானதாகிவிடும்.

ஈராக் யுத்தத்தினால் இலங்கையின் தேயிலை ஏற்றுமதி பாதிக்கப்பட்டுள்ளது என நான் கூறமாட்டேன். ஈராக் மக்கள் எப்போதுமே தண்ணீரைவிடத் தேநீரைத்தான் அதிகமாக அருந்துவார்கள்.

சதாமின் ஆட்சி வீழ்ந்துவிட்டாலும், ஈராக் மக்கள் தேநீரில் கொண்டுள்ள விருப்பம் தணிந்துவிடாது. ஈராக்கில் மீண்டும் திறந்த பொருளாதாரமுறை ஏற்பட்டால், இலங்கைத் தேயிலையை வாங்குவார்கள். இதனால், இலங்கைப் பொருளாதாரம் பாதிக்கப்படாது.

என்னைப் பொறுத்தவரையில், இப்போது ஈராக்கிற்குத் திரும்பிச் செல்லும் எண்ணமில்லை. அங்கு புதிய அரசாங்கம் பதவியேற்று என்னைத் தொடர்ந்தும் இலங்கைத் தூதுவராகப் பதவி வகிக்கப் பணித்தால் தொடர்ந்து பணியாற்றத் தயாராக இருக்கிறேன்.

சதாம் ஹுசைன் இப்போது எங்கே இருக்கிறார் என்று எனக்குத் தெரியாது. அமெரிக்காவின் மிகச் சிறந்த புலனாய்வுச் சேவையினராலேயே அவரது இருப்பிடத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

சதாமின் ஆட்சி வீழ்ச்சி அடையும் என்றோ - அவர் இப்படித் தப்பி ஓடி ஒளிந்து கொள்வார் என்றோ நான் ஒருபோதும் நினைத்துக் கூடப் பார்க்கவில்லை. எனக்கு அவரைத் தனிப்பட்ட ரீதியாகக்கூட நன்கு தெரியும்.

அவர் தப்பி ஓடியது பெரும் அவமானமான விடயமாகும். சதாம் மீண்டும் திரும்பி வந்தாலும் மக்கள் அவரை ஏற்கமாட்டார்கள். அவர் மக்கள் மத்தியில் கொண்டிருந்த உறுதித்தன்மையை இழந்துவிட்டார்.

ஒரு தலைவன் எப்போதுமே தம்முடன்தான் இருக்க வேண்டும் என்றே மக்கள் எதிர்பார்ப்பார்கள் என ஈராக்கிய தூதுவர் வாஸ்டி அப்பாஸ் மேலும் தெரிவித்தார்.

# மீண்டும் பாலசிங்கத்தை அமைச்சர் பீரிஸ் சந்திப்பார்!

தாய்லாந்தில் நடைபெறவிருந்த அடுத்த சுற்றுச் சமாதானப் பேச்சுக்கள் பிற்போடப்பட்டதையடுத்து, அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் லண்டனில் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

நோர்வேயின் பிரதிநிதிகள் முன்னிலையிலேயே லண்டனில் இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளது.

இதேவேளை- வொஷிங்ரனில் நடைபெற்ற உதவிவழங்கும் மாநாட்டிற்குத் தாம் அழைக்கப்படாதது குறித்தும், விடுதலைப் புலிகள் தமது அதிருப்தியை நோர்வே சமாதான ஏற்பாட்டாளர்களுக்குத் தெரிவித்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# சமாதான வழியில் தீர்வுகாண இதுவே அரசாங்கத்துக்கு கடைசிச் சந்தர்ப்பம்

## அன்னைபூபதி நினைவு நிகழ்வில் சிவாஜிலிங்கம்

இலங்கை சுதந்திரமடைந்து 55 வருடங்கள் பூர்த்தியாகின்றன. இவ்வளவு காலமும் ஆட்சிக்கு வந்த சிங்கள அரசுகளால் தமிழ் மக்கள் ஒடுக்கப்பட்டார்கள், அழிக்கப்பட்டார்கள், இதுவே எமது வரலாறாக இருக்கின்றது.

- இவ்வாறு தியாக தீபம் அன்னை பூபதியின் பதினைந்தாவது ஆண்டு நினைவின் இறுதிநாள் நிகழ்வு பருத்தித்துறை சிவன் கோவில் வீதியில் நடைபெற்றபோது, யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம். கே. சிவாஜிலிங்கம் கலந்து கொண்டு உரையாற்றிபோது குறிப்பிட்டார்.

சிவாஜிலிங்கம் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது -

கடந்த ஐந்து வருடங்களாகத் தமிழ் மக்கள் ஒப்பந்தங்கள் செய்து எந்த உரிமைகளையும் பெற்றுக்கொள்ளவில்லை. இலங்கை சுதந்திரமடைந்து 55 வருடங்களாகின்றன. ஆட்சிக்கு வந்த சிங்கள அரசுகளால் படிப்படியாகத் தமிழ் மக்கள் ஒடுக்கப்பட்டார்கள், அழிக்கப்பட்டார்கள்.

கல்லோயா, பட்டிப்பளை, சேனநாயக்க சமுத்திரத்தை அண்டிய இடங்களில் சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்தி சிங்களவர்களைக் குடியேற்றினார்கள். இது தமிழ் மக்களுக்கு விழுந்த முதல் அடியாகும். மலையக மக்கள் 10 லட்சம் பேருடைய குடியுரிமையைப் பறித்தார்கள். இதனால் மேலும் தமிழ் மக்கள் ஒடுக்கப்பட்டார்கள். இது இரண்டாவது அடி. இவ்வாறு தொடர்ந்துகொண்டே போனது.

1957 ஆம் ஆண்டு பண்டா - செல்வா ஒப்பந்தம் செய்யப்பட்டது. அது இனவாதிகளாலும், பௌத்த சங்கத்தினராலும் கிழித்தெறியப்பட்டது.

1961 ஆம் ஆண்டு வட - கிழக்கில் அஹிம்சைப் போராட்டம் நடாத்தப்பட்டது. சிறீமா அரசாங்கம் இராணுவத்தை அனுப்பி அப்போராட்டத்தை மழுங்கடிக்கச் செய்தது. 1970 சிறீமா அரசாங்கம் தரப்படுத்தல் முறையைக் கொண்டுவந்து, தமிழ் இளைஞர்களின் முன்னேற்றத்தைத் தடைசெய்தது.

இலங்கை குடியரசு ஆனதும் தமிழ் மக்கள் விழித்தார்கள். வல்வெட்டித்துறையில் முதன்முதலாக தமிழ் மக்கள் ஒன்றுகூடி கூட்டமைப்பை உண்டாக்கினர். 1972 ஆம் ஆண்டு வட்டுக்கோட்டை மாநாட்டில் தனியரசு அமைக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

1979 ஆம் ஆண்டு பயங்கரவாதத் தடைச்சட்டத்தைக் கொண்டுவந்தார்கள். தமிழ் இளைஞர்களை சிறையில் அடைத்தார்கள். சித்திரவதைக்குள்ளாக்கினார்கள். உலகிலே 4 ஆவது மிகப்பெரிய நூலகமான யாழ்.பொது நூலகம் தீயிட்டுக் கொளுத்தப்பட்டுத் தீக்கிரையாக்கப்பட்டது. 1983 ஆம் ஆண்டு மீண்டும் இனக்கலவரம் மூண்டது. திருநெல்வேலியில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்டதற்குப் பதிலடியாக எத்தனையோ தமிழ்மக்கள் கொல்லப்பட்டனர். குட்டிமணி போன்ற 53 அரசியல் கைதிகளைச் சிறையில் வேட்டையாடி வெறியாட்டம் ஆடினார்கள்.

2000 ஆம் ஆண்டு ஒருதலைப் பட்சமாகப் புலிகள் நான்கு மாத யுத்த நிறுத்தம் செய்தார்கள். மிகப்பெரிய ஆனையிறவு இராணுவமுகாம் வீழ்த்தப்பட்டது. இதன் பின்னரே ஆயுத பலத்தால் புலிகளை அழிக்க முடியாது என நினைத்துப் பேச்சு வார்த்தைக்கு வந்தார்கள்.

உயர்பாதுகாப்பு வலயத்தினுள் அரசியல்வாதிகள் நுழையக்கூடாது என இராணுவம் கூறுகிறது. ஆனால், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஓர் அரசியல்வாதி. ஆகவே அவரும் உயர்பாதுகாப்பு வலயத்தினுள் நுழையக்கூடாது என்றுதான் கூறவேண்டும். பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் பதிலாகச் சர்வதேச நாடுகளின் உதவியுடன் இராணுவத்தை அரசாங்கம் பலப்படுத்தி வருகின்றது.

இதுவரை ஒரு இலட்சம் மக்களைப் பலிகொடுத்துவிட்டு இன்றும் அடிமைகளாக வாழமுடியாது. இது அரசாங்கத்திற்குக் கடைசிச் சந்தர்ப்பம். ஆகையால், அரசாங்கம் இதை நழுவ விட்டால் தனிநாடு அமைந்தே தீரும் எனத் தெரிவித்தார்.

இவ்வைபவத்தில் ஹாட்லிக் கல்லூரி உப அதிபர் குணசீலன், வடமராட்சி இந்துக் கல்லூரி அதிபர் கனகரட்ணம், மாணவர் தலைவன் க.ஆதவன் ஆகியோரும் உரையாற்றினர்.

(17)

# இரட்டை ஆட்சிமுறைமைக்குள் சீனா - ஹொங்கொங் உறவுகள்

*சென்றவாரத் தொடர்ச்சி...*

சீனக் குடியரசின் காலனித்துவ வரலாற்றில் மூன்று பிரதேசங்கள் அதனைவிட்டு விலகிச் சென்றுவிட்டன. ஹொங்கொங், மாக்கோ, தாய்வான் ஆகியனவே அவையாகும். இவற்றில் ஹொங்கொங் 1997 ஆம் ஆண்டும், மாக்கோ 1999 ஆம் ஆண்டும் சீனாவுடன் மீள இணைந்து கொண்டன. தாய்வான் இன்னமும் இணைந்து கொள்ளவில்லை. இது சீனாவிற்கும், தாய்வானுக்கும் இடையிலான முறுகலாகவும் சர்ச்சைக்குரிய விடயமாகவும் இன்றுவரை நிலைபெற்றிருக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.






முதலில், நாம் ஹொங் கொங்கினை ஆராய்வோம் - 1840 ஆம் ஆண்டு பிரித்தானியா "அபின் யுத்தத்தின்" .போது சீனாவைக் கண்டுபிடித்தது. பிரித்தானியாவின் தொடர்ச்சியான காலனித்துவ மனோபாவத்தினால், 1842 ஆம் ஆண்டு ஹொங்கொங் தீவினில் தனது ஆதிக்கத்தினை நிலைநிறுத்தத் தொடங்கியது. பிரித்தானியா, 1895 இல் தனது காலனித்துவ நாடாகக் ஹொங்கொங்கினை மாற்றியமைத்துக் கொண்டது.

மாசேதுங், தனது தலைமையிலான கலாசாரப் புரட்சியின்போதும், அதன் இறுதி வெற்றியின்போதும் ஹொங்கொங் தீவினையும், தாய்லாந்தினையும் தம்மிடம் பிரித்தானியா மீண்டும் தரவேண்டும் என்ற கோரிக்கையினை விடுத்தார்.

இதன் தொடர்ச்சித் தன்மையாக- டெங் சியாஓ பெங் தலைமையிலான சீன மத்திய கம்யூனிஸ்ட் கட்சி 1978 ஆம் ஆண்டு, டிசெம்பர் மாதம் நடத்திய மத்திய குழுக்கூட்டத்தில் ஹொங்கொங்கினைப் பிரித்தானியாவிடமிருந்து மீளப்பெற்றுக்கொள்வது என்று தீர்மானத்தினை நிறைவேற்றிக் கொண்டது.

இத்தீர்மானத்திற்கமைய 1984 ஆம் ஆண்டு யூலை 23 ஆம் திகதி டெங் சியாஓ பெங் தலைமையிலான சீனக்குழு - ஹொங்கொங் கைத்தொழில் மற்றும் வர்த்தகத்துறையுடன் இணைந்து சில நிபந்தனைகளின் அடிப்படையில் மீள இணைப்பதற்கான பூர்வாங்க வேலைகளை ஆரம்பித்தார். (ஆனால், இக்காலப் பகுதியில் பிரித்தானியாவின் இறைமைக்குள்ளேயே ஹொங்கொங் இருந்தமை குறிப்பிடத்தக்கது).

## சுயநிர்ணயம் ஒரு பார்வை

### பகுதி-30

ஆனால், மேற்படி சீன மற்றும் ஹொங்கொங் பிரதிநிதிகள் ஒரு இணக்கப்பாட்டுக்குவர, சீனா பின்வருமாறு ஒப்புதல் வாக்குமூலம் அளித்தது. அதாவது **"We are Pursuing a Policy of" - one Country, two systems, more Specificeally, This means that within**

**வேலும்மயிலும் சேந்தன்**

**the people's Republic of China the main Land with its one billion people will maintain the socialist system, while**



**Hongkong and Taiwan continue under the Capitalists system"** எனற அடிப்படையிலான சுயாட்சி அதிகாரத்தினை நிர்வாக ரீதியாக வழங்குவதாக அதாவது- சீனா தொடர்ந்தும் சோஷலிஸ பொருளாதாரத்தினை அடிப்படையாகக்கொண்டு காணப்படும் அதேவேளை ஹொங்கொங் சந்தைப் பொருளாதாரத்தினை அடிப்படையாகக் கொண்டு காணப்படும் என வாக்குறுதி அளித்திருந்தது.

இந்த நிபந்தனையின் அடிப்படையில் 1984 ஆம் ஆண்டு யூலை 31 ஆம் திகதி டெங் சியாஓ பெங்கும், அன்றையப் பிரித்தானியப் பிரதமர் மாக்கிரட் தட்சரும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடத் தொடங்கினர். இவ்விரண்டு நாடுகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் 22 தடவைகள் நடைபெற்றதன் பயனாகப் பிரித்தானியா- ஹொங்கொங் தீவினைச் சீனாவிடம் கொடுக்கத் தீர்மானித்தது.

ஹொங்கொங்கினைப் பொறுப்பெடுக்க விழைந்த சீனா, ஹொங்கொங்கிற்கு ஏனைய தனது பிரதேசங்களைவிட, மிக்கூடுதலான அதிகாரங்களை வழங்கி, சமச்சீரற்றமுறையில அதிகாரங்களைக் ஹொங்கொங்கிற்குக் கொடுத்துள்ளது.

இதனை **SAR - Special Administrative Region** ஆக - அதாவது, விசேட நிர்வாகப் பிராந்தியமாகச் சீனா - ஹொங்கொங்கினை வரையறுத்துக்கொண்டு, வெளியுறவுக் கொள்கை மற்றும் பாதுகாப்புத் தவிர்ந்த அனைத்துச் சுயாதிக்கத்தினையும் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.



**SAR** திட்டத்தின் அடிப்படையில் ஹொங்கொங் அதன் பிரதேசத்திற்குள் நிறைவேற்று அதிகாரம், சட்டவாக்கு அதிகாரம், நீதியாட்சி அதிகாரம், நிதியியல் அதிகாரங்களைப் பெற்றுள்ளது.

சீனாவின் விசேட நிர்வாகப் பிராந்தியமாகிய ஹொங்கொங், அதன் மக்களாலேயே ஆளப்படுகின்றது. ஆனால், சீனாவின் பிரதிநிதியாகக் ஹொங்கொங்கில் விசேட ஆளுநர் இருக்கின்றார். (பிரதி செவ்வாய் தொடரும்...)

# அபாயகரமான ஆயுதங்கள் குண்டுகளல்ல உங்கள் கைகளிலுள்ள பேனாக்களே!

**சர்வதேச ஊடகங்கள் அறிவது!**

'எனக்கருகில் குண்டு வீழ்ந்தது. எண்ணிப்பார்த்ததில் 12 சடலங்கள் காணப்பட்டன. இதில் படை வீரர்களும் அடங்குவர். ஒரு அமெரிக்க விமானம்தான் எங்களுக்கு அருகில் குண்டைப் போட்டது. எங்களின் மொழி பெயர்ப்பாளரும் இதில் காயமடைந்தார். எமக்குப் பக்கத்திலேயே குண்டுகள் வீழ்ந்தன. என்னைச் சுற்றியுள்ள காட்சிகள் எல்லாம் நரகலோகக் காட்சிகளாகத்தான் உள்ளன.

வாகனங்கள் எரிந்துகொண்டிருக்கின்றன. சடலங்கள் தீப்பற்றி எரிகின்றன. சுற்றிவர அங்கே சடலங்கள் இருக்கின்றன. உடல்கள் சிதறிக் காணப்படுகின்றன. பல பொதுமக்களும் கொல்லப்பட்டனர். கண்ணுக்கு முன்னால் சடலங்கள் தெரிகின்றன. பார்க்கமுடியாத காட்சி இது..'

இது என்ன நம்பமுடியவில்லை.. ஈராக்கில் பொதுமக்கள் கொல்லப்பட்டதைச் சர்வதேச வானொலி ஒன்று இவ்வாறு அப்பட்டமாக உலகிற்கு எடுத்துரைக்கும் என்று நம்பமுடியவில்லை, இல்லையா?

உண்மையில் இந்த குண்டுத் தாக்குதல் வட ஈராக்கில்- அமெரிக்கப்படைகள் நடத்திய தாக்குதல் ஒன்றில் தவறுதலாக விமானக் குண்டு ஒன்று அமெரிக்க வீரர்கள் இருந்த பக்கம் வீழ்ந்ததில்- அமெரிக்க வீரர்கள் சிலரும், பொதுமக்களும் கொல்லப்பட்டனர். அமெரிக்க வீரர்களின் வண்டித்தொடரைப் பார்த்துவிட்டு, அமெரிக்க விமானப்படை தவறுதலாகத் தங்களின் ஆட்களையே தாக்கியிருக்கின்றார்கள்.



மறைப்பதும், மறைக்கப்படுவதுமாக...!

குர்திஷ் போராட்டக் குழுவின் தலைவரின் சகோதரரும் இதில் கொல்லப்பட்டார். இந்தச் சம்பவத்தைத்தான் பிபிசி நிருபர் இவ்வாறு வர்ணித்தார். மாறான, ஈராக் மக்கள் மீது அமெரிக்கப் படைகள் போட்ட குண்டுகளை அவர் வர்ணிக்கவில்லை. பொதுமக்கள் கொல்லப்பட்டமையும், அதன் கோரத்தையும் கடந்த ஒருமாத ஈராக் யுத்தத்தில், இந்த ஒருதடவை மட்டுமே சர்வதேச ஊடகத்தில் விலாவாரியாக அறிய முடிந்தது.

அமெரிக்க விமானங்கள் போட்ட ஒரேயொரு குண்டு தவறுதலாக விழுந்து அமெரிக்க வீரர்களும், குர்திஷ் மக்களும் இறந்ததை இவ்வாறு விமர்சிக்கும் இந்தச் சர்வதேச ஊடகங்கள், ஏன் ஈராக் மக்கள் இறந்ததை விபரிக்கவில்லை.

ஒரு குண்டுக்கு இத்தனைபேர் பலியாக.. இத்தனை கோரமான விளைவு என்றால்.. இந்த 3 வாரத்தில் ஈராக் மக்களின் மீது இதுவரை கிட்டத்தட்ட பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட குண்டுகள் போடப்பட்டனவே.. அத்தனை குண்டுகளிலும் எத்தனை பொதுமக்கள் இறந்திருந்திருப்பர். எத்தனை பேர் உடல் சிதறிப் பலியாகியிருப்பர்.. எத்தனை வீடுகள் தரைமட்டமாகியிருக்கும்.. எத்தனை பேர் கண்களை, கைகளை, கால்களை, அவயவங்களை இழந்திருப்பார். எத்தனை சிறார்கள் கொல்லப்பட்டிருப்பர்.. ஏன் இவைபற்றிய செய்திகள் இந்த நவீன உலகின் தொலைத்தொடர்பு சாதனங்களால் வெளியிட முடியவில்லை. அல்லது தெரிந்தும் நீங்கள் வெளியிடவில்லையா?

மாறாக, உண்மையைச் சொன்னதற்காக ஒரு செய்தியாளர் சர்வதேச செய்தி நிறுவனத்திலிருந்து நீக்கப்பட்டார் என்ற செய்திதான் கிடைத்தது. இதுதான் இன்றைய பத்திரிகா தர்மம்.. ஊடகங்களின் உண்மையிசம்..

குவைத்திலே சதாம் ஏவிய ஏவுகணைகளில் ஒரேயொரு ஏவுகணை மட்டும் விழுந்து வெடித்தது. அட அந்த ஏவுகணை விழுந்த இடம், அதனால் காயப்பட்ட குவைத் பொதுமக்கள்.. இப்படி எத்தனை காட்சிகளைக் காட்டினீர்கள்? எத்தனை தடவை காட்டினீர்கள்..?

அட ஆயிரக்கணக்கான குண்டுகள் ஈராக் மீது வீழ்ந்ததே, அத்தனை அவலங்களையும் ஏன் காட்ட மறுத்தீர்கள். ஏன் அவர்கள் மனிதர்கள் இல்லையா?

தமிழில் ஒரு பழமொழி உண்டு. 'அறப்படிச்ச மூஞ்சூறு கழுநீர்ப் பானையில் விழுந்தது' என்பார்கள். உண்மையில் அது தவறு. அறவடிஞ்ச முன்சோறு கழிநீர்ப் பானையில் விழுந்தது என்பதே சரி. அதாவது. ஊரில் சோறு சமைக்கும்போது கஞ்சி வடிப்பார்கள். அப்படி கஞ்சி வடிக்கும்போது சில சோற்றுப் பருக்கைகளும் கஞ்சியோடு சேர்ந்து வெளியே வந்துவிடும். ஒரு நல்ல காரியத்திற்காகச் செய்யப்படும் சில நடவடிக்கைகளில் சில நல்லவர்களும் பாதிக்கப்படுவார்கள்.. அது தவிர்க்க முடியாதது என்பதை இந்தப் பழமொழி 'அறவடிஞ்ச முன் சோறு கழுநீர்ப் பானையில் விழுந்தது' என்பதாகக் குறிப்பிடுவார்கள்.

ஆனால், இங்கு கஞ்சிவடிக்கும் செயல் நடைபெறுவதாகத் தெரியவில்லை. சோற்றுப்பானையை உடைத்து அதற்குள் இருக்கும் கல் ஒன்றை தேடும் முயற்சி நடைபெறுவதாகத் தெரிகிறது. கடைசியில் கல் கிடைத்ததா என்றால் அதுவும் கேள்விக்குறிதான்.

இதை எந்தவொரு சர்வதேச ஊடகங்களாவது கேள்வி கேட்டார்களா?

ஹிட்லரின் காலத்தில் யூதர்கள் கொல்லப்பட்டபோது, ஜேர்மனியர்கள் அதை தவறு என்று நினைக்கவில்லை. காரணம், அப்போது அங்கிருந்த ஊடகங்களை - குறிப்பாக அப்போது வளர்ச்சியடைந்திருந்த திரைப்படத்துறையைக் ஹிட்லர்- யூதர்களுக்கு எதிரான உணர்வுகளைப்பரப்பப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்தியிருந்தார். யூதர்களைக் கொடியவர்கள் என்றும், அறவட்டிக்குப் பணம் வாங்குபவர்கள் என்றும், ஜேர்மனியர்களைச் சுரண்டுபவர்கள் என்றும் திரைப்படங்கள் மூலம் காண்பிக்கப்பட்டது. அந்தக் கொலைகளுக்கு - அந்த ஊடகங்களும் ஏதோவொரு வகையில் காரணமாயின..

உலகின் எங்கோ ஒரு மூலையில் நடக்கும் செய்தி, அதே வினாடியில் - உடனுக்குடன் உலகின் அடுத்த மூலையிலுள்ள மக்களின் செவிகளைச் சென்றடைகின்றது என்று ஊடகங்களும், செய்தியாளர்களும் பெருமைப்படுகின்றீர்களே. எங்கோ நடக்கும் காட்சிகளை உங்கள் வீடுகளுக்கு உடனனுப்பி, உங்கள் கண்களுக்குக் காட்சியாக்குகின்றோம் என்று பெருமைப்படுகின்றீர்களே! உண்மைச் செய்திகளை மறைத்து, அரசாங்கங்களுக்குத் துதிபாடும் உங்கள் செய்திகளைக் கேட்பதைவிட, பார்ப்பதைவிட- காதிருந்தும் செவிடராய், கண்ணிருந்தும் குருடராய் இருப்பதே மேல்..

ஊடகங்கள் மக்களை நாடிச் செல்லவேண்டும்.. மக்களின் நாடியாகச் செயற்படவேண்டும். ஊடகங்கள் பொய் சொல்வதைவிட, உண்மையை மறைப்பதே அதிக ஆபத்தானது, அபாயகரமானது. பொய் சொல்லும் ஊடகங்களை மன்னித்தாலும், உண்மைகளை மறைக்கும் ஊடகங்களை மன்னிக்கமுடியாது.

நாங்கள் - தமிழர்கள். எற்கனவே போரின் வடுக்களைத் தாங்கிய மக்கள். எங்கள் அவலங்கள், துன்பங்கள், இழப்புகளை மற்றைய நாடுகள் முழுமையாகப் புரிந்துகொள்ள வாய்ப்பின்றி இருந்தோம். ஆனால், உலகத்து ஊடகங்கள் எல்லாம் சென்று, பக்தாத் மக்களுக்குப் பக்கமாக நின்றும் உண்மைகள் வெளிவராதமை கண்டு கவலையடைகின்றோம்.

நவீன தொழில்நுட்பத்தில் இன்று உலகம் சுருங்கிவிட்டது என்று தம்பட்டமடிக்கின்றீர்களே! உண்மையில் சுருங்கியது உலகமல்ல.. உங்கள் இதயமே!

இன்று உலகில் அபாயகரமான ஆயுதம் எதுவென்றால், அது அமெரிக்க குண்டுகளல்ல.. உங்களின் கைகளிலுள்ள பேனாக்களும், கமராக்களுமே!.

**கனடாவிலிருந்து**
**வாசகன் ரட்ணதுரை**

# இடைக்கால அரசுத் தலைவர் பக்தாத் நகரத்துக்கு விஜயம்!



(பக்தாத்)

போரினால் சேதமுற்ற ஈராக்கைப் பார்வையிட, ஈராக்கின் இடைக்கால அரசைப் பொறுப்பேற்கவுள்ள அமெரிக்க ஓய்வுபெற்ற ஜெனரல் ஜேய் கார்னர் அங்கு சென்றுள்ளார். இடைக்கால அரசின் முக்கிய பணி, புனரமைப்பேயன்றி ஆட்சி அல்ல என அவர் கூறினார்.

இதேவேளை, வெளிநாட்டவர் ஒருவர் ஈராக்கை ஆள்வதை ஏற்க முடியாது என குர்திஷ் இனத் தலைவர் தலபானி கூறியுள்ளார். ஈராக்கின் ஷியா முஸ்லிம்களும், அவரின் நிர்வாகத்தைத் தாம் ஏற்கப்போவதில்லை என அறிவித்துள்ளனர்.

கார்னரும் அவரின் பிரதித் தலைவரான பிரிட்டிஷ் மேஜர் ஜெனரல் ரிம் குரோஸ்ஸும் பக்தாத்திலுள்ள வைத்தியசாலை மற்றும் பொது இடங்களைப் பார்வையிட்டனர்.

நாம் அனைத்து வசதிகளையும் தருவோம். ஆனால், அதற்குக் காலம பிடிக்கும் என இவர்கள் வைத்தியசாலை அதிகாரிகளிடம் தெரிவித்தனர்.

இதனிடையே - பக்தாத்தில் மேற்குலக பத்திரிகையாளர்கள் தங்கியிருக்கும் பலஸ்தீன ஹோட்டல் முன்பாக, தினமும் திரளும் ஈராக்கியர், ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டுவருகின்றனர்.

ஈராக்கிய எதிர்கால அரசுடன் பாதுகாப்பு உடன்படிக்கை ஒன்றைச் செய்துகொள்ளவும் அமெரிக்கா தீர்மானித்துள்ளது.



வீடு புகுந்து திருடுபவர்களின் அச்சுறுத்தலால், ஏகே - 47 ரக துப்பாக்கியுடன் வீட்டைக் காவல் புரியும் ஈராக்கியப் பெண்ணும், அவரது மகளும் பேரனும்.



ஈராக்கியப் படையினர் கைவிட்டுச் சென்ற ஏவுகணையொன்றை பக்தாத் இளைஞரொருவர் தொட்டுப் பார்க்கிறார்.

# சீனாவினுள் மீண்டும் 'சார்ஸ்' நோய் பரவல்



சீனாவில் மீண்டும் 'சார்ஸ்' நோயின் தாக்கம் அதிகரித்துள்ளது. தலைநகர் பீகிங்கில் நேற்று மட்டும் 132 புதிய நோயாளிகள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதுவரை பாதிக்கப்படாத மாகாணங்களுக்கும் சுவாச நோயான 'சார்ஸ்' பரவியுள்ளது.

இதேசமயம் - ஹொங்கொங்கில் இதுவரையில் 94 பேர் இந்நோயால் பலியாகியுள்ளனர்.

இதுவே இந்நோயால் ஒருநாட்டில் இறந்தோர் தொகையில் அதிகமாகும். சீனாவில் 86 பேரும், கனடா மற்றும் சிங்கப்பூரில் 14 பேரும் இதுவரையில் இறந்துள்ளனர்.

நோயை எவ்வாறு பரவாது தடுக்கலாம் என்ற ஆய்வில் உலக சுகாதார ஸ்தாபனம், பீகிங்கில் ஆய்வுகளைச் செய்துவருகின்றது.

# நைஜீரியாவின் புதிய தலைவராக இராணுவ ஆட்சியாளர்

நைஜீரியாவின் புதிய தலைவராக ஒதுசேகன் ஒபசன்ஜோ - பொதுத் தேர்தல் மூலம் தெரிவாகியுள்ளார். 20 வருடங்களுக்குப் பின் சிவிலியன் ஒருவர் நைஜீரியாவின் ஜனாதிபதியாகிறார்.

தேர்தலில் 66 சதவீத வாக்குகளை ஒபசன்ஜோ பெற்றுள்ளார். இவரை எதிர்த்துப் போட்டியிட்ட முகமது புகாரி, 24 சதவீத வாக்குகளை மட்டுமே பெற்றுள்ளார்.

கிறிஸ்தவரான ஒபசன்ஜோ - முன்னாள் இராணுவ ஆட்சியாளராகவும் இருந்தவர். நாட்டின் தென்மேற்குப் பகுதியில் பிரபலமானவர். முஸ்லிமான புகாரி, வடக்கில் முஸ்லிம்களின் ஆதரவைப் பெற்றவர்.

தேர்தல்கள் அமைதியாக நடந்ததாக பொதுநலவாய நாடுகளின் கண்காணிப்பாளர்கள் தெரிவித்தனர்.

# பக்தாத் நகரினுள் சதாம் இன்னமும் சுற்றிவருகிறார்

## எதிர்க்கட்சித் தலைவர் சலாபி தகவல்



அகமட் சலாபி

சதாமும் அவரின் ஒரு மகனும் பக்தாத்தில் நடமாடுவதாக ஈராக் எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஈராக்கின் தேசிய காங்கிரஸ் தலைவர் அகமட் சலாபி, தம் உறுப்பினர்கள் இத்தகவலைத் தெரியப்படுத்தியுள்ளதாகக் கூறுகின்றார்.

சதாம் இன்னமும் பக்தாத்தில் இருக்கிறார். ஆனால், அடிக்கடி இடமாறிக்கொண்டிருக்கிறார் என எனக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவல்கள் கூறுகின்றன.

எனினும், அவர் தங்கியிருக்கும் இடத்திலிருந்து வேறு இடத்துக்கு மாறிய பின்பே, அவர் முன்னர் தங்கியிருந்த இடம் குறித்த தகவல்கள் கிடைக்கின்றன. சதாமின் மகன் கூட நேற்று முன்தினமிரவு அதாமியா பகுதியில் காணப்பட்டதாக நான் அறிகிறேன்.

எதிர்கால ஈராக் புனரமைப்பிற்கு ஐ.நா. முக்கிய பங்குவகிக்க வேண்டும் என்பதை என்னால் ஏற்கமுடியாது.

ஏனெனில், ஐ.நா. செயலர் கோபி அனான், சதாமுடன் கூடவிருந்து சுருட்டுப் புகைத்தவர். சதாமின் சகாதான் அனானும் என்றே ஈராக்கியர் கருதுவதாக சலாபி குறிப்பிட்டுள்ளார்.

சலாபி (வயது 58) 1956 இல் இளைஞனாக இருந்தபோது, ஈராக் கைவிட்டு தப்பியோடியவர். ஜனாதிபதி புஷ்ஷின் நெருங்கிய சகாவான இவர், சதாம் ஆட்சி கவிழ்க்கப்பட்ட பின் அமெரிக்காவிலிருந்து ஈராக்கிற்கு அமெரிக்க படையதிகாரிகளால் அழைத்துவரப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



உலகவலம்

# மற்றுமோர் ஈராக்கிய அமைச்சர் அமெரிக்க படைகளிடம் சிக்கினார்



அமெரிக்காவினால் தேடப்படும் ஈராக்கிய பிரமுகர்களில் மற்றுமொருவர், அமெரிக்கப் படைகளினால் கைதானதாக அமெரிக்க அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

ஈராக்கின் முன்னாள் உயர்கல்வி மற்றும் விஞ்ஞான ஆராய்ச்சி அமைசசரான அப்ட் அல்கவார் என்பவரே கைதானவராவார்.

இதேசமயம் - சதாமின் மருமகனான ஜமால் முஸ்தபா சுல்தான், அமெரிக்கப் படைகளிடம் சரணடைய முன்வந்துள்ளதாகத் தெரிவிககப்படுகிறது.

ஜமால், சதாமின் இளைய மகளை திருமணம் முடித்தவராவார். சிரியாவில் வசிக்கும் ஜமால், ஈராக் சென்று சரணடையவுள்ளதாக அறிவித்துள்ளார்.



ஆயுதங்களைக் களவாடி விற்கும் ஈராக்கியர் ஒருவர், அமெரிக்கப் படையினரிடம் அகப்பட்டு, விசாரணை செய்யப்படுகின்றார்.

# ஈராக் - ஜோர்தான் எல்லை அகதிகளால் நிரம்புகின்றது

ஈராக்கிற்கும் ஜோர்தானுக்கும் இடையில் மனித நடமாட்டம் தடை செய்யப்பட்ட பகுதிக்குள் சுமார் ஆயிரம் அகதிகள் வந்துள்ளதை யடுத்து அவர்களுக்கான மனிதாபிமானப் பணியை மேற்கொள்வதில் நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன.

உள்ளூர்வாசிகளின் அச்சுறுத்தலால் ஈராக்கை விட்டு தப்பியோடிய பல ஈரானிய பலஸ்தீன அகதிகளே இவ்வாறு எல்லையருகே பரிதவித்து நிற்கின்றனர். இவர்களை ஏற்றுக் கொள்ள ஜோர்தானும் மறுத்துள்ளது.

அகதிகளுக்காக, ஜோர்தான் எல்லைகளைத் திறந்துவிட மறுப்பதால் அங்கு பெரிய மனிதாபிமானப் பிரச்சினை தோன்றியுள்ளதாக ஐ.நா. அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். தம்மில் பலர் மேற்கு பக்தாத்திலுள்ள ஈரானிய அகதிமுகாமிலிருந்து வந்ததாக இந்த அகதிகள் கூறுகின்றனர். தம்மை அங்கு உள்ளூர் வாசிகள் மிரட்டியதாகவும் அவர்கள் கூறுகின்றனர்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# அரசுடனான பேச்சுக்கள்...

சுக்களும் வெற்றிகரமாகக் கடைப்பிடிக்கப்பட்டதை நீங்கள் அறிவீர்கள். உறுதியான யுத்த நிறுத்தமும் சமாதானப் பேச்சுக்களின் முன்னேற்றமும் இன மோதலுக்கு அமைதி வழியில் தீர்வுகாண வேண்டும் என்ற இரு தரப்புக்களுக்குமிடையிலான உறுதியான அர்ப்பணிப்பு மூலமே பெறப்பட்டது என்பதனை அறிவீர்கள். இருதரப்புகளிடையேயான உள்உறவுகளும், உறுதியானதும் வெளிப்படையானதுமான பேச்சுக்கள் மற்றும் திறமைமிக்க அனுசரணையாளர்களின் வழிகாட்டுதல்களும், பேச்சுக்களை முன்னேற்றுவதற்கு உதவியாக இருந்தன. பேச்சுக்களில் பங்குபற்றிய குழுவினர் இணைந்து முக்கியமான உபகுழுக்களை அமைக்கக்கூடியதாகவும் இருந்தது.

ஆரம்ப கட்டப் பேச்சுக்களின் போது, அரசாங்கமும் - புலிகளும் சர்வதேச சமூகத்தினையும் இதில் இணைத்துக்கொள்வதற்கு இணக்கம் காணப்பட்டது. 2002 நவம்பர் 22 ஆம் திகதி, ஒஸ்லோ உதவி வழங்கும் மாநாடு இத்தகைய கூட்டு முயற்சிக்கு முன்னுதாரணமாகத் திகழ்ந்தது.

போரினால் பாதிக்கப்பட்ட வட-கிழக்குப்பகுதி மக்களின் வழமை நிலையை திருப்பிக்கொண்டுவரவும், அவர்களுக்கு வேண்டிய புனர்வாழ்விற்கு சர்வதேச உதவியைப் பெறுவதான முடிவிற்கு விடுதலைப் புலிகள் நல்லெண்ணத்தினை வெளிப்படுத்தினர். அரசுடன் புலிகள் ஒன்றிணைந்த முயற்சிகளில் பங்குபற்றினர்.

நாம் எமது நல்லெண்ணத்தினையும் நம்பிக்கையினையும் வெளிப்படுத்தியபோது, பொருளாதார உதவிக்காக சர்வதேச சமூகத்திடம் எமது அமைப்பு அணுகுவதனை உங்களது அரசாங்கம் ஓரங்கட்டத் தொடங்கியுள்ளது. எதிர்வரும் ஜூன் மாதம் ஜப்பானில் இடம்பெறவுள்ள, பிரதான உதவிவழங்கும் நாடுகளுக்கு ஆயத்த நடவடிக்கையாக, வொஷிங்ரனில் கடந்த 14 ஆம் திகதி நடைபெற்ற மாநாட்டிற்கு விடுதலைப் புலிகள் கலந்து கொள்ளாது தடுக்கப்பட்டதை இங்கு சுட்டிக்காட்டுகிறோம்.

தமிழ்த்தேசத்தின் பொருளாதார நலனினை பாதிக்கக்கூடிய வகையில், தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகளான, சமாதான முயற்சிகளில் முக்கிய பங்காளியான விடுதலைப் புலிகளை விலக்கி வைத்தமை, நல்லெண்ணத்தினைக் குழிதோண்டி புதைக்கப்படும் முயற்சியாகவே நாம் பார்க்கின்றோம்.

தடைசெய்யப்பட்ட அமைப்பின் பிரதிநிதிகளை தமது நாட்டுக்குள் அழைக்க அமெரிக்காவிற்கு சில சட்டச் சிக்கல்கள் உள்ளதை உங்கள் அரசும் எமது அனுசரணையாளர்களான நோர்வே அரசும் நன்கு அறிந்திருக்கலாம். இந்தநிலையில் இந்த முக்கியமான உதவி ஆயத்த மாநாட்டில் விடுதலைப் புலிகளை பங்குபற்ற வசதியாக பொருத்தமான ஒரு இடத்தைத் தெரிவு செய்திருக்க வேண்டும். ஆனால், இதனைச் செய்ய உங்கள் அரசு தவறியமையானது சந்தேகத்தினைத் தருவதுடன், எம்மை நிராகரித்தமை கண்மூடித்தனமானதாகும். இந்த மாநாட்டிலிருந்து விடுதலைப் புலிகளைத் தவிர்த்தமை, சமாதான முயற்சியில் எமது மக்களுக்கிருந்த நம்பிக்கையைக் கடுமையாகப் பாதித்துள்ளது.

உங்களுக்குத் தெரியும், உங்கள் அரசு பதவியேற்றவுடன் எமது அமைப்புடன் யுத்தநிறுத்தத்தினைச் செய்து, 20 வருடகாலப் போரை முடிவுக்குக்கொண்டுவந்தபோது, உங்கள் அரசுமீது மக்களுக்கு உறுதியான நம்பிக்கையும், எதிர்பார்ப்பும் ஏற்பட்டது. நோர்வேயின் உதவியுடன் இருதரப்பும் பேச்சுக்களைத் தொடர்ந்தபோது இந்த எதிர்பார்ப்புகள் மேலும் அதிகரித்தன. குறிப்பாக, போரினால் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களிலும் அகதி முகாம்களிலும் தங்கியிருந்த இலட்சக்கணக்கான மக்கள் எதிர்நோக்கும் உடனடி, அன்றாடத் தேவைகள் பூர்த்தி செய்யப்படும் என நியாயமான எதிர்பார்ப்பு ஒன்று நிலவியது.

இதேபோன்று, யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் வழமை நிலையை மீளக் கொண்டு வருதற்கான முக்கிய நிபந்தனையாக - தமிழரின் வீடுகள், பாடசாலைகள், கோவில்கள் மற்றும் பொதுக் கட்டடங்களில் இருந்து இராணுவத்தினர் வெளியேறுமாறு கேட்கப்பட்டனர்.

இவ்வாறு இணக்கம் காணப்பட்டதற்கு மாறாக, படையினர் வெளியேறுவதற்கான காலஅவகாசம் கடந்துவிட்டது. முன்பிருந்த நிலையில் எவ்வித மாற்றமும் இல்லை. உங்களது அரசுடன் ஒவ்வொரு சுற்றுப் பேச்சுக்களின்போதும், எமது மக்களின் தொடரும் துன்பங்களை மீண்டும் மீண்டும் முன்வைத்தோம். இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியேற்றுவதற்கான உங்கள் அரச பிரதிநிதிகளின் உறுதிமொழிகள் பயனற்றுப் போனது. பேச்சுக்களில் இதுவரை கிடைத்த முன்னேற்றம், முக்கிய விடயமான எமது மக்களின் சுயநிர்ணய அடிப்படையிலான சமஷ்டியை ஆராய்வதற்கான இணக்கப்பாடே ஆகும்.

மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணமுதல், இந்த முயற்சிக்கு முன்னுரிமை வழங்க முடியாது. இதன் விளைவாக பாதிக்கப்பட்ட மக்கள் சமாதான முயற்சிகள் தொடர்பில் தமது நம்பிக்கையினை இழந்துவிட்டனர்.

தமிழ்ப் பிரதேசங்களில் துப்பாக்கிகள் அமைதியானதே தவிர, வழமை நிலை திரும்பவில்லை. எமது மக்களின் சுதந்திர நடமாட்டத்திற்குத் தடையாக ஆயிரக்கணக்கான அரச படைகள் எமது நகரங்களிலும், வாழ்விடங்களிலும் நிலைகொண்டுள்ளன. இத்தகைய இராணுவப் பிரசன்னம் தமிழர் பகுதிகளில், குறிப்பாக சன நெருக்கம் கூடிய யாழ்ப்பாணத்தில், அமைதிகாலத்தில் காணப்படுவதும், இடம்பெயர்ந்த மக்கள் தமது வீடுகளுக்குத் திரும்ப அனுமதிமறுப்பதும் நேர்மையற்ற, நீதியற்ற செயல்.

முழு நாட்டையும் வறுமையே பாதிப்பதாக உங்களது அரசாங்கம் சர்வதேச மாநாடுகளில் தெரிவிக்கின்றது. இதனடிப்படையில், இலங்கையை மீளக் கட்டியெழுப்புதல் தொடர்பான ஆவணத்தில் உங்கள் அரசின் பொருளாதாரத் திட்டம் வரையப்பட்டுள்ளது. ஆனால், அத்திட்டத்தில் வடக்கு - கிழக்கில் போரினால் பாதிக்கப்பட்டது குறித்து எதுவும் பிரஸ்தாபிக்கப்படவில்லை.

எம்மைப் பொறுத்தவரையில் தென்னிலங்கையில் காணப்படும் யதார்த்த நிலைமைக்கும், தமிழர் பகுதிகளுக்கும் இடையே கணிசமான அளவு வேறுபாடு காணப்படுகிறது. கொடூரமான போரை தமிழர் பகுதிகளே சந்தித்துள்ளன.

20 வருட தொடர்ச்சியான கொடூர யுத்தம், ஈடுசெய்யமுடியாத பேரிழப்பை வடக்கு-கிழக்கு உட்கட்டுமானத்தில் ஏற்படுத்தியுள்ளது.

மக்களின் இடப்பெயர்வாலும் இராணுவ நடவடிக்கைகளினால் இழந்த பொருட்களை மீளப்பெறமுடியாத நிலையாலும், வார்த்தையில் கூறமுடியாத வேதனையும், வறுமையையும் வட - கிழக்குப் பிரதேசம் கொண்டுள்ளது. தொடர்ச்சியான இடப்பெயர்விலுள்ள இப்பிரதேசமக்கள், மளத் தமது சொந்த இடங்களில் வாழ முடியாத நிலைமை தோன்றியுள்ளது.

போரில் பாதிக்கப்பட்ட இம்மக்கள், மீண்டும் தமது தனித்துவத்தினைபெற அவசர உதவிகள் தேவை. வீதிகள், வைத்தியசாலைகள், பாடசாலைகள் என்பவற்றின் மீள்புனரமைப்பு அவர்களின் வழமையான வாழ்விற்கு அத்தியாவசியம்.

தென்னிலங்கையில் காணப்படும் வறுமைக்குக் காரணம், கடந்தகால அரசுகளின் தமிழருக்கெதிரான பேரழிவு தரும் போர்த்திட்டங்களே. சிங்கள தேசம் தனது முழுவளத்தினையும் போருக்காக வீணடித்துள்ளது. சமாதானத்திற்கான போர் என்ற கொள்கையின் கீழ், பாரிய ஆயுதக் கொள்வனவுகளால் சர்வதேச ரீதியில் நிதி முடக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது. அரசநிதியின் தவறான கையாள்கை மற்றும் ஊழல் என்பன, நிலைமையை மேலும் மோசமாக்கின.

எனவே, தெற்கில் காணப்படும் வறுமை நிலைக்கும் வட- கிழக்கில் காணப்படும் நிலைக்கும் இடையே பாரிய வேறுபாடு உண்டு. இந்த யதார்த்த நிலையை கருத்தில் எடுக்காது உங்கள் அரசாங்கம் -வறுமை என்பதனை பொதுவான தோற்றப்பாடாகக் காட்டி, பொது அணுகுமுறையில் தீர்வுகாண முயன்றுள்ளது.

உங்களினது அரசின் இலங்கை மீளுருவாக்க ஆவணத்தில், வடக்கு-கிழக்கின் அடையாளம் காணப்பட்ட இலக்குகள் எவையும் காணப்படவில்லை. ஆவணத்தில் காணப்படும் புள்ளிவிபரங்களும் தென்னிலங்கையையே பிரதானப்படுத்தியுள்ளன. இதன்மூலம் சர்வதேச உதவியைப் பெற்றுக்கொள்ள உங்கள் அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன் மூலம், வடக்கு- கிழக்கு அபிவிருத்திக்கு எந்த முன்னுரிமையும் வழங்கப்படவில்லையென்பது உறுதியாகின்றது. வறுமை ஒழிப்புத் திட்டத்தில் வடக்கு - கிழக்குப் பகுதிகள் சேர்க்கப்படவில்லை.

கடந்த மூன்று தசாப்தகாலமாக, வடக்கு- கிழக்கில் மேற்கொள்ளப்பட்ட இராணுவக்கொள்கை காரணமாக, முற்றாக அழிந்துள்ள உட்கட்டுமானப் பகுதியைக் கருத்தில் எடுக்காது, நேர்மையற்ற வித்தில் உங்கள் அரசாங்கம், இலங்கை முழுவதற்குமான நிதியுதவியைக் கோரியுள்ளது.

மேற்கூறப்பட்டவை போல் - வொஷிங்ரன் மாநாட்டிலிருந்து விடுதலைப் புலிகளைத் தள்ளிவைத்தமை, போர்நிறுத்த உடன்படிக்கையில் காணப்பட்ட நிபந்தனைகளை நிறைவேற்றாமை, தமிழ்ப்பகுதிகளில் தொடரும் இராணுவ ஆக்கிரமிப்பு, அரசின் பொருளாதாரத் திட்டத்தில் வட-கிழக்கு மக்களின் வறுமை ஒழிப்புத்திட்டம் சேர்க்கப்படாமை என்பன, அரசின் மீது தமிழ் மக்களதும் விடுதலைப் புலிகளின் தலைமையதும் நம்பிக்கை இழக்கக் காரணமாகியுள்ளன. இக்காரணங்களால், சில காலப்பகுதிக்கு சமாதானப் பேச்சுக்களில் தாம் பங்குபற்றுவதில்லை என, விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம் முடிவு செய்துள்ளது. ஜூனில் ஜப்பானில் நடைபெறும் உதவி வழங்கும் மாநாட்டிலும் நாம் பங்குபற்றமாட்டோம். இந்த துன்பகரமான முடிவை யிட்டு கவலை தெரிவிக்கிறோம். அதேவேளை, இனப்பிரச்சினைக்கு அரசியற்தீர்வு காணப்படவேண்டும் என்ற எமது உறுதியினையும் தெரிவிக்கிறோம்.

போர்நிறுத்த உடன்படிக்கையில் காணப்பட்ட - வழமை நிலைக்குக் கொண்டுவரும் விடயங்கள் குறித்தும், வட-கிழக்கில் மக்களை மீள் குடியமர்த்தும் விடயம் குறித்தும் இணக்கம் காணப்பட்ட விடயங்களை, தாமதமின்றி உடனடியாக அமுல் செய்வதன்மூலம் - தமிழ் மக்கள் மீண்டும் நம்பிக்கை வைக்க, இலங்கை அரசாங்கம் செயற்பட வேண்டும் என நாம் கேட்டுக்கொள்கிறோம். போரினால் அழிந்த தமிழ்த் தேசத்தினை மீளக்கட்டியெழுப்புவதற்கான தனது பொருளாதார அபிவிருத்தித் திட்டத்தினை, அரசு மீள் பரிசீலிக்க வேண்டுமெனவும் நாம் கேட்டுக்கொள்கிறோம்.

## மூதூர் சம்பவங்கள் தொடர்பான

# திருமலை செயலகக் கூட்டத்துக்கு புலிகளுக்கு உரிய அழைப்பில்லை

மூதூர் நிலைமை தொடர்பாக ஆராய, திருமலை அரச அதிபரால் கூட்டப்பட்ட கலந்துரையாடலுக்கு, உரியமுறையில் அழைப்புக் கிடைக்காமையினால் புலிகளின் பிரதிநிதிகள் நேற்றுச் செல்லவில்லை.

அரச அதிபர் நெலும்தெனிய, புலிகளின் மாவட்டத் தலைமைக்கு அழைப்பு விடுத்ததாகக் கூறியபோதும், அது உரியமுறையில் கிடைக்கவில்லை எனத் தெரியவருகிறது.

திருமலைக் கச்சேரியில் நடந்த இக்கூட்டத்துக்கு, மாலை 3 மணிவரை புலிகளின் பிரதிநிதிகள் வராமையால், 3.15 இற்கு கூட்டம் ஆரம்பமானது. இதில் அமைச்சர் ஹக்கீம், தெளபீக் எம்.பி ஆகியோரும், அரச அதிபர், படை உயரதிகாரிகள், அரச சார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

இன்னும் இரு தினங்களில் - பிரதமர், திருமலை வந்து மூதூர் நிலைமைகளை ஆராயவுள்ளதாக, தமக்குத் தொலைபேசி மூலம் குறிப்பிட்டதாக அமைச்சர் ஹக்கீம் சந்திப்பின்போது குறிப்பிட்டார். நிவாரணப் பணிக்கு 50 மில்லியன் ரூபாவை பிரதமர் வழங்கியதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தமிழ் முஸ்லிம் கிராம எல்லைகளில் அத்துமீறி நடக்கும் குடியேற்றங்கள் தொடர்பாக, புலிகளுடன் பேசி முடிவெடுக்கவுள்ளதாகவும் முன்னர் மீன்பிடிப் பிரச்சினையை இவ்வாறு பேசி தாம் நல்ல முடிவு கண்டதாகவும் அமைச்சர் ஹக்கீம் தெரிவித்தார்.

இதேசமயம்- மூதூர் நிலை தொடர்பாக சுமுகநிலை ஏற்படுத்த ஒத்துவரத் தயார் என விடுதலைப் புலிகள், கண்காணிப்புக்குழு மூலமாக உறுதியளித்துள்ளனர். (04,10)

## குளிக்கச்சென்ற இளைஞன் மூதூரில் சுட்டுக்கொலை

திருகோணமலை தோப்பூர்- அல்லைநகர், பன்னாம்புக் குளத்தில் குளிக்கச் சென்ற முஸ்லிம் இளைஞர் ஒருவர், நேற்று நண்பகல் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டார். அவரோடு சென்றிருந்த மூன்று இளைஞர்கள் துப்பாக்கிச் சூட்டிலிருந்து உயிர்தப்பியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மரணமானவர் - சதக்குத்துல்லா ர.்.பைதீன் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இதேவேளை- மூதூர் மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் பதற்றநிலை தணிந்து அமைதி நிலவுவதாக, பாதுகாப்பு அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையும், மூதூரில் எவ்வித அசம்பாவிதங்கள் இன்றி இடம்பெற்றது.

எனினும், நேற்று ஐந்து மணி முதல் இன்று காலை 6 மணிவரை, மூதூர் பிரதேசத்தில் பொலிஸ் ஊரடங்கு அமுலாக்கப்பட்டது.

## அதிபர், ஆசிரியர் கலந்துரையாடல்

தென்மராட்சி, கல்வி வலயப் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்களுடனான கலந்துரையாடல் இன்று சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. அதிபர்கள், ஆசிரியர்களைத் தவறாது சமூகமளிக்குமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

## இந்துமதகுருமார் ஒன்றிய சந்திப்பு

சர்வதேச இந்துமத குருமார் ஒன்றிய விசேட கலந்துரையாடல் ஒன்று, நாளை மாலை 6 மணியளவில் சர்வதேச இந்து குருமார் ஒன்றியத்தில் நடைபெறவுள்ளது. இதில், விடுதலைப் புலிகளின் பிரமுகர்களும் கலந்துகொள்ள இருப்பதால், அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு சர்வதேச இந்து குருமார் ஒன்றியச் செயலாளர் அறிவித்துள்ளார்.

## மரக்காலை உரிமையாளர் சந்திப்பு

யாழ்.மாவட்ட மரக்காலை, பாரிய தச்சுக்கூடம், பனை மரக்காலை உரிமையாளர்களுடனான சந்திப்பு ஒன்று, இன்று பிற்பகல் 3 மணியளவில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இச் சந்திப்பில் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ்.மாவட்ட அரசியற்துறையினர் அறிவித்துள்ளனர். (சு)

# பிரிட்டிஷ் அதிகாரி வருகையால் புலிகள்-படையினர் சந்திப்பு ரத்து

(வவுனியா)

வவுனியாவில் விடுதலைப் புலிகளுக்கும் படையதிகாரிகளுக்குமிடையில் நடைபெறவிருந்த சந்திப்பு, நேற்று திட்டமிட்டபடி நடைபெறவில்லை. இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் அலுவலகத்தில் மேற்படி சந்திப்பு நடக்கத் திட்டமிடப்பட்டிருந்தபோதும், படையதிகாரிகள் வருகை தராததனால் இச்சந்திப்பு இடம்பெறவில்லை.

இதனால், இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருடன் விடுதலைப் புலிகள் மட்டும் சந்தித்து கலந்துரையாடிவிட்டுச் சென்றனர்.

மேற்படி சந்திப்பிற்கு படையதிகாரிகள் வருகை தராமைக்கு, பிரித்தானிய முன்னாள் இராணுவ உயர் அதிகாரி மேஜர் ஜெனரல் மைக்கல் ரோஸ்- படையதிகாரிகளுடன் சந்திப்பை மேற்கொள்ள வவுனியா வந்தமையே காரணமெனத் தெரியவருகிறது. மிகவும் இரகசியமான முறையில் வவுனியாவிற்கு வருகைதந்த மேஜர் ஜெனரல் மைக்கல் ரோஸ் - சிவில் அதிகாரிகளையோ, அரசியல்வாதிகளையோ சந்திக்காது, படையதிகாரிகளுடனேயே தமது சந்திப்பினை மேற்கொண்டுவிட்டு நேற்றே கொழும்பு திரும்பினார்.

பிரித்தானிய முன்னாள் இராணுவ உயர் அதிகாரி மைக்கல் ரோஸிடம், இலங்கை அரசாங்கம்- உயர்பாதுகாப்பு வலயம் தொடர்பான ஆலோசனை அறிக்கையினைக் கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (03)

## தமிழ்....

புலிகளின் சார்பில் - திருமலை அரசியற்துறைப் பொறுப்பாளர் எஸ். திலக், மூதூர் பிரதேச மஜ்லிஸ் அஸ் சூரா சார்பில் தலைவர் அல்ஹாஜ் எப்.எம்.கரீமும் இந்தத் தீர்மானங்களில் கைச்சாத்திட்டனர். இத்தீர்மானம் நேற்று நள்ளிரவு வெளியிடப்பட்டது. இச்சந்திப்பில் அனுசரணையாளராக திருமலை மாவட்ட கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் பங்குபற்றினார்.(04,10)

## உலகத் தமிழர்க்கு...

தமிழகத்தில் எம். ஜி.ஆர். முதல்வராக இருந்தவேளை, தலைவர் பிரபாகரன் அங்கிருந்தபோது, புலிகளின் தகவல் தொடர்பு உபகரணங்கள், காவற்துறையினரால் பறிமுதல் செய்யப்பட்டன. இவற்றை மீளத்தருமாறுகோரி ஒரு அஹிம்சைப் போராட்டத்தை தலைவர் பிரபாகரன் ஆரம்பித்திருந்தார். அதன் பரிமாணத்தினையும், அஹிம்சைப் போராட்டத்தின் வலிமையும் உணர்ந்துகொண்டு, பறிமுதல் செய்யப்பட்ட தகவல்தொடர்பு உபகரணங்களை மீளவும் வழங்குமாறு எம்.ஜி.ஆர். உத்தரவிட்டார் என அலிஸாஹீர் மெளலானா மேலும் கூறினார்.

விலை குறைவென்பது பொருளின் தரத்திற்குச் சான்றாகுமா?

இல்லவே இல்லை

நாம் வழங்கும் PI, PII தர IBM, DELL வகைக்கணனிகள் உங்கள் எவ்வகையான தேவைகளையும் நிறைவு செய்வதுடன், அரச உத்தியோகத்தர்களிற்கு தவணை முறையான விற்பனையையும் அளிக்கின்றது.



17000/= லிருந்து உத்தரவாதத்துடன்

STP. Your Partner in IT Solutions
54A, Palaly Road, Kantharmadam, Jaffna T.P: 2222674

(சி-864)

ஒப்புநோக்குநர்கள் தேவை

பத்திரிகைத்துறையில் பணியாற்றிய அனுபவம்வாய்ந்த ஒப்புநோக்குநர்கள் தேவை.

22.04.2003 இன்று காலை 11 மணிக்கு அலுவலகத்துக்கு சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.

நிர்வாக இயக்குநர்
நமது ஈழநாடு

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 22.04.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.